# தெளிவு

மாத இதழ்




வடபகுதி முஸ்லிம்கள் எல்.ரீ.ரீ.ஈ யினால் வெளியேற்றப்பட்ட 22வது ஆண்டு நிறைவு
பக்கம் -5

வல்லாரையின் மகத்தான மருத்துவ குணங்கள் பக்கம் -9

சித்தாரின் பிதாமகன்
பக்கம் -11



"THELIVU" MONTHLY TAMIL JOURNAL இதழ் 36 ஜனவரி 2013 விலை 25.00

## ஜம்மியத்துல் உலமாவுடன் மல்லுக்கு நிற்கும்

# பொது பல சேனா

ஹலால் சான்றிதழ் வழங்குவதற்காக அறவிடப்படும் பெருந்தொகையான பணம் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுக்கு அனுப்பப்படுவதாக "பொது பல சேனா" இலங்கை ஜம்மியத்துல் உலமாவைக் குற்றம் சாட்டியுள்ளது.
கனடாவில் இயங்கும் பொயின்ட் டீ பேஸ்கல் புலனாய்வு அமைப்பு இதனை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் சன்விவ் தொலைக்காட்சி அலைவரிசையில் இது தொடர்பாக பலமுறை ஒளிபரப்பு



செய்யப்பட்டதாகவும் ஸ்ரீ சம்புத்த ஜயந்தி நிலையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் பொது பல சேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் வண. வித்தாரந்தெனியெ நந்த தெரிவித்ததாக "திவய்ன" சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
ஹலால் உணவை உறுதிப்படுத்திக்கொள்வது தொடர்பாக முஸ்லிம்களுக்குள்ள உரிமை பற்றியோ அல்லது முஸ்லிம்களை இலக்காகக்கொண்டு தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு விநியோகிக்கப்படும் ஹலால்

13ம் பக்கம்

## நீதிமன்றத்தின் அழைப்பாணைக்கு பாராளுமன்றம் கட்டுப்பட தேவையில்லை




மேன்முறையீட்டு நீதிமன்ற அழைப்பாணைக்கமைய தெரிவுக்குழு உறுப்பினர்கள் எவரும் நீதிமன்றத்தில் ஆஜராகப் போவதில்லை. நீதிமன்றத்தில் ஆஜராவது என்பது மோசமான முன்மாதிரியாக அமையும் என சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா தெரிவித்தார். பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரணை செய்த தெரிவுக்குழுவின் பணி முடிந்து விட்ட நிலையில், அந்தக்குழு நீதிமன்றில் ஆஜராக தேவையில்லை என்று கூறிய அவர் மக்கள் ஆணையைப் பாதுகாக்க மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை நீதிமன்றத்தை அவமதிப்பதாகாது எனவும் குறிப்பிட்டார்.
மகாவலி நிலையத்தில் 02.01.2012ல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில், பாராளுமன்றமே உயர்வானது. நீதிமன்ற அழைப்பாணைக்கு பாராளுமன்றம் கட்டுப்படத் தேவையில்லையென முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க அன்று வழங்கிய தீர்ப்பினடிப்படையிலேயே இன்றைய சபாநாயகரும் தீர்ப்பு வழங்கியுள்ளார். அதற்கமைய நாம் நீதிமன்றத்தில் ஆஜராகத் தேவையில்லை.
நீதிமன்ற அழைப்பாணைக்கு தெரிவுக்குழு தலைசாய்க்கத் தேவையில்லை என ஐ.தே.க.யும் தனது நிலைப்பாட்டை அறிவித்திருப்பதை வரவேற்கிறோம்.
சிரிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை பறிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் நானும் அவர் சார்பாக ஆஜராகியிருந்தேன். அறிக்கையொன்றை வெளியிட்ட பின் குழுவில் இருந்து நாம் வெளியேறினோம். ஆனால், அந்தக் குழு ஒருதலைப்பட்சமாக விசாரணை நடத்தி சிரிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை பறிக்க முடிவு செய்தது. இங்கும் அதேபோன்றே இடம்பெற்றது.
நெவில் சமரகோனுக்கு எதிரான குற்றப்பிரேரணை விசாரணையின் போது அன்று எவரும் அது குறித்து வாய்திறக்கவில்லை. ஆனால் இன்று இந்த முறையை மாற்றுவது குறித்து பேசுகின்றனர். ஆனால், நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் படியே பிரதம நீதியரசருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற விவாதத்தின் பின் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டாலே அது ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்றத் தீர்மானத்தை செயற்படுத்துவதோ நிராகரிப்பதோ ஜனாதிபதியின் கையிலே உள்ளது. ஆனால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை புறந்தள்ளும் தார்மீக உரிமை ஜனாதிபதிக்கு இருப்பதாக கருதவில்லை என்றார்.
இதற்கிடையில், தெரிவுக்குழுவில் அங்கம்வகித்த ஜே.வி.பி மற்றும் தமிழ் பிரதிநிதிகள் நீதிமன்றில் ஆஜராகப் போவதாக அறிவித்துள்ளனர்.

## தென் கொரியாவில்


### அதிபராக ஒரு பெண்



தென் கொரியாவில் முதல் முறையாக பெண் ஒருவர் அதிபராகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளார். தற்போது அதிபராகத் தேர்தெடுக்கப்பட்டுள்ள பார்க் ஹ்யாங் ஹேயின் தந்தை ஒரு இராணுவச்சதிப் புரட்சியில் ஆட்சியை பிடித்த பிறகு 18 ஆண்டுகள் நாட்டின் அதிபராக இருந்தார். அவரது தந்தையும் முன்னாள் சர்வாதிகாரியுமான பார்க் யுங் ஹீ 1979 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.
மிகவும் நெருக்கமாக இருந்த போட்டியின் இறுதியில், பார்க் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட லிபரல் கட்சியின் வேட்பாளர் மூன் ஜே யின் தனது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளார். 60 வயதாகும் செல்வி பார்க், தற்போது அதிபாராக இருக்கும் லீ ம்யுங் பாக் அவர்களிடமிருந்து பொறுப்பேற்றுக் கொள்வார்.
நாட்டில் ஒரு புதிய தேசிய மகிழ்ச்சிக்கான சகாப்த்தம் தொடங்கியுள்ளது என்று தனது வெற்றிக்கு பிறகு, ஆதரவாளர்களிடையே பேசும் போது பார்க் அவர்கள் கூறினார்.
தற்போது வட கொரியா மற்றும் தென் கொரியா ஆகிய இரு நாடுகளிலும், இராணுவத் தலைவர்களின் வாரிசுகளே நாட்டை ஆளும் சூழல் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தகுந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யூத விஞ்ஞானி ராபர்ட் கில்ஹாம் இஸ்லாத்தை ஏற்றார்



ஒரு யூதரான கருவியல் ஆராய்ச்சியாளர் ராபர்ட் கில்ஹாம் என்பவர் அண்மையில் இஸ்லாத்தைத் தழுவியுள்ளார். திருக்குர்ஆனின் ஒரு வசனமே இவரது மனமாற்றத்திற்கு வழி செய்தது.

'மணவிலக்கு அளிக்கப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய் (முடியும்)வரை (மறுமணம் செய்யாமல்) காத்திருக்க வேண்டும்" (2:228) என்பதே அத்திருவசனம். மணவிலக்கு செய்யப்பட்ட பெண்கள் மூன்று மாதம் காத்திருந்த பின்பே, அதாவது மூன்று மாதவிடாய் பருவங்களில் 'இத்தா' இருந்த பின்பே மறுமணம் செய்ய வேண்டும். இந்த வசனத்தைப் படித்தபோதுதான் ராபர்ட் மனம் மாறினார்.

ராபர்ட் நீண்ட காலமாக ஓர் ஆய்வை மேற்கொண்டிருந்தார். கைவிரல் ரேகைப் பதிவு (Finger Printing) ஒரு மனிதனை அடையாளம் காட்டுவதைப் போன்றே, டி.என்.ஏ. ரேகைப் பதிவு தம்பதியரை அடையாளம் காட்டிவிடும். "ஒரு பெண்ணில் பதிவாகியுள்ள ஆணின் டி.என்.ஏ. ரேகைப் பதிவு மூன்று மாதங்களுக்குப் பிறகே அழியும்". என்பது ராபர்ட்டின் ஆராய்ச்சி முடிவு. அதையே குர்ஆனின் இவ்வசனம் கூறுகிறது என்பதைக் கண்ட யூத விஞ்ஞானி ஆடிப்போனார் குர்ஆனை ஏற்றார்.



இது தொடர்பாக, எகிப்தைச் சேர்ந்த டாக்டர் அப்துல் பாசித் முஹம்மது சையித் கூறுகிறார்: அறிவியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே ராபர்ட் கில்ஹாம் இஸ்லாத்தில் இணைந்துள்ளார். தம்பதியர் உடலுறவு கொண்டால், ஆண் தனது பாலின ரேகையைப் பெண்ணிடம் விட்டுச் செல்கிறான். அந்த ரேகை மூன்று மாதங்களுக்குப் பிறகே முற்றாக அழியும் என்று ராபர்ட் கண்டுபிடித்தார். அதற்கேற்ப, அமெரிக்காவில் ஆப்பிரிக்க முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒரு பகுதியில் கள ஆய்வில் இறங்கினார். அவர் அப்பகுதியில் வாழும் முஸ்லிம் பெண்களிடம் அவர்களின் கணவர்களது ரேகை மட்டுமே பதிவாகியிருந்தது. அதே நேரத்தில், அமெரிக்கப் பெண்கள் வாழும் ஒரு தெருவில் ஆய்வை மேற்கொண்டபோது. அப்பெண்களிடம் பல்வேறு ரேகைகள் காணப்பட்டன. மூன்று வெவ்வேறு ரேகைகள் அவர்களில் பதிவாகியிருந்தன.

ராபர்ட் கில்ஹாம் அதிரடியாக ஒரு காரியம் செய்தார். அவர் தம் மனைவியை மருத்துவப் பரிசோதனைக்கு ஈடுபடுத்தினார். அவளிடம் மூன்று ரேகைப் பதிவுகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அத்துடன் தம்முடைய மூன்று மகன்களில் ஒருவன் மட்டுமே தமக்குப் பிறந்தவன் என்பதையும் கண்டறிந்தார்.

இதிலிருந்து. மூன்று மாத 'இத்தா' ஏன் கடமையாக்கப்பட்டது என்பதற்கான காரண விளக்கமும் கிடைக்கிறது. முந்தைய கணவனின் டி.என்.ஏ. ரேகைப் பதிவு முற்றாக அழிய மூன்று மாதங்கள் பிடிக்கும். அதன்பின் அவள் மறுமணம் செய்துகொண்டால், டி.என்.ஏ. பரிசோதனையில் குழப்பம் இராது. இல்லையேல், மறுமணம் செய்தபின் பிறக்கும் குழந்தையின் டி.என்.ஏ.வும் முந்தைய கணவனின் டி.என்.ஏ.வும் ஒத்துப்போக இடமுண்டு. குழந்தை யாருடையது என்ற குழப்பம் வெடிக்கும்.

- மௌலவி அ.முஹம்மது கான் பாகவி

நன்றி. – சமரசம்

# பாலஸ்தீனத்தில் தொடரும் அவலம்..

பாலஸ்தீனத்துடனான அமைதிப் பேச்சுவார்த்தையைப் புதைக்கும் சவப்பெட்டியின் கடைசி ஆணியையும் அடித்துவிட்டது இஸ்ரேல். கிழக்கு ஜெருசலேம், மேற்குக்கரைப் பகுதியில் புதிதாக 3 ஆயிரம் வீடுகளைக் கட்டி யூதர்களை அங்கு குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டது.

பாலஸ்தீனத்தை இறையாண்மைபெற்ற தனிநாடாக ஐ.நா. அங்கீகரித்ததை ஏற்றுக்கொள்ள முடியாத ஆத்திரத்தின் வெளிப்பாடாகவே இஸ்ரேலின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. பாலஸ்தீனத்துக்கு ஐ.நா.வின் அங்கீகாரம் கிடைத்த அடுத்த நாளே இந்த குடியேற்றத் திட்டத்தை அறிவித்துவிட்டது.

இந்த நடவடிக்கை மூலம், ஏற்கெனவே பதற்றம் அதிகமுள்ள பாலஸ்தீனப் பகுதியில் அடுத்ததொரு போருக்கு அழைப்பை விடுத்துள்ளது இஸ்ரேல். ஆனால் இந்த முறை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆசி இஸ்ரேலுக்குக் கிடைக்கவில்லை என்பது மட்டும் ஒரே ஆறுதல். எப்போதுமே ஆதரவளிக்கும் அமெரிக்காகூட இந்தப் புதிய குடியமர்வு விஷயத்தில் இஸ்ரேலை ஆதரிக்கவில்லை. தனது முடிவை இஸ்ரேல் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றே கூறியுள்ளது. பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், ஸ்வீடன், டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

ரஷ்யா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளும், ஐ.நா.வும் கூட இஸ்ரேலின் இப்போதைய நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளன. ஆனால் பாலஸ்தீனர்களுடன் அடுத்த மோதலுக்குத் தயாராகிவிட்ட இஸ்ரேல் இதைச் சிறிதும் செவி மடுக்கவில்லை.

இஸ்ரேல் மேற்கொண்டுள்ள முயற்சி மேற்குக் கரைப் பகுதியை இரு துண்டுகளாகப் பிரிப்பதுடன், பாலஸ்தீனர்களை ஜெருசலேமில் இருந்து முற்றிலுமாகத் துண்டித்துவிடும் வகையில் உள்ளது. இது பாலஸ்தீனர்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.




இது தவிர பாலஸ்தீனர்களுடனான தங்கள் வன்மத்தை நேரடியாகவே வெளிப்படுத்தியுள்ளது இஸ்ரேல். "பாலஸ்தீனத்தைத் தனிநாடு என்று ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துவிட்ட நிலையில் இஸ்ரேலைப் பாதுகாத்துக் கொள்ளவும், எங்களை வலிமைப்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது கட்டாயமாகிவிட்டது" என்று அந்நாடு அறிவித்துள்ளது. ஏற்கெனவே "பாலஸ்தீனம்" என்ற வார்த்தையையே வெறுக்கும் இஸ்ரேல், இப்போது அதற்குத் தனிநாடு அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளதால் வெறுப்பின் உச்சிக்கே சென்றுவிட்டது.

பாலஸ்தீனம் - இஸ்ரேல் பிரச்னை என்பது இருநாடுகள் தொடர்புடையது மட்டுமல்ல, அதையும் தாண்டி 3 மதங்கள், இனம், அரசியல், மக்களின் உணர்வுகள் உள்ளிட்ட பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியது. இவற்றுக்கு நடுவே அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் குறுக்கீடும் உண்டு.

இஸ்ரேல் இதுபோன்று அடாவடி நடவடிக்கைகளை மேற்கொள்வது புதிதல்ல. 1967ஆம் ஆண்டு மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேமின் ஒருபகுதியை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்த பிறகு பல்வேறு கட்டமாக சில லட்சம் யூதர்களை அங்கு குடியேற்றியுள்ளது.

சர்வதேச சட்டப்படி இது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றாலும், அதனைத் தட்டிக் கேட்க யாருமில்லை. ஏனெனில் அமெரிக்கா, மேற்கத்திய நாடுகளின் ஆதரவு இஸ்ரேலுக்கு உள்ளதே முக்கிய காரணம். சொந்த மண்ணிலேயே அகதிகளாக மாறிவிட்ட பாலஸ்தீனர்களுக்கு, ஐ.நா.வின் அங்கீகாரம் புதிய நம்பிக்கையை அளித்தது. ஆனால் அதனைத் தகர்க்க களமிறங்கிவிட்டது இஸ்ரேல்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு பாலஸ்தீனத் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் மீண்டும் இஸ்ரேல் மீது தாக்குதலுக்குத் தயாராகி வருகின்றன பாலஸ்தீனத்துக்காகப் போராடும் ஹமாஸ் உள்ளிட்ட ஆயுதம் ஏந்தும் குழுக்கள். ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காஸப் பகுதியில் இருந்து விரைவிலேயே இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட வாய்ப்பு உள்ளது. இஸ்ரேல் எதிர்பார்ப்பதும் இதைத்தான்.

சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையே பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ள நிலையில், இனியும் பாலஸ்தீனர்களைப் புறந்தள்ளுவது மனிதநேயத்துக்கு எதிரான செயல். இது தொடர்வதற்கு உலக சமுதாயம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

-சு. வெங்கடேஸ்வரன்

நன்றி: தினமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியா வெற்றிகரமாக ராக்கெட்டை ஏவியது




வடகொரியா அண்டை நாடுகளின் எதிர்ப்பை மீறி, வட கொரியா, 12.12.2012 புதன் கிழமை, ராக்கெட்டை விண்ணில், வெற்றிகரமாக ஏவியது. சட்டவிரோதமாக, அணு ஆயுதம் தயாரிக்கும் நாடுகளின் பட்டியலில், ஈரான், வடகொரியா இடம் பெற்றுள்ளன. வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும், நீண்ட நாட்கள் சண்டை நடந்தது. ஜப்பான், தென் கொரியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள், வடகொரியா ராக்கெட் தயாரிப்பதை எதிர்த்தன.

ஐ.நா.,சபையிலும், வடகொரியா ராக்கெட் தயாரிக்கக் கூடாது என, 2009ல், தீர்மானம் இயற்றப்பட்டது. அமெரிக்காவின் ரவுடி நாடுகளின் பட்டியலில், ஈரான், வடகொரியா, கியூபா உள்ளிட்ட நாடுகள் உள்ளன. எனவே, வடகொரியாவின் ராக்கெட் திட்டத்தை அமெரிக்காவும் எதிர்த்தது. செயற்கை கோளை ஏவுவதற்காக, நீண்ட தூரம் செல்லக்கூடிய ராக்கெட்டுகளை தயாரிப்பதாக, வட கொரியா தெரிவித்தது. ஏவுகணை தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வடகொரியா தயாரிக்கும் ராக்கெட்டுகள், அண்டை நாடுகளை தாக்கும் உள்நோக்கம் கொண்டவை என, ஜப்பானும், வட கொரியாவும் கருத்து தெரிவித்தன.

இதற்கிடையே, க்வாங்மையாங்சாங்-3 என்ற செயற்கை கோளை சுமந்து, வடகொரிய ராக்கெட் 12.12.2012ல், விண்ணுக்கு சென்றது. எங்கள் நாட்டு வான் வழியாக, இந்த ராக்கெட் சென்றால் அதை சுட்டு வீழ்த்துவோம் என, ஜப்பான் எச்சரித்திருந்தது. கடந்த வாரம் ஏவுவதாக இருந்த இந்த ராக்கெட், தொழில் நுட்ப காரணம் காரணமாக, இம்மாதம், 29ம்தேதி ஏவப்படும், என வடகொரியா அறிவித்திருந்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அமெரிக்காவும், ஏவுகணை தடுப்பு சாதனங்களை தயார் நிலையில் வைத்திருந்தது. ஆனால், இந்த ராக்கெட், ரகசியமாக, 12.12.2012 காலை, 9.50க்கு ஏவப்பட்டது. வடகொரியாவின் இந்த செயலுக்கு, ஐ.நா. பொது செயலர், பான் கீ மூன் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# ஈராக் அதிபருக்கு பக்கவாதம்




ஈராக் அதிபர் ஜலால் தலபானி, பக்க வாதம் காரணமாக, மருத்துவ மனையில் அனும திக்கப்பட்டு உள் ளார்.ஈராக் அதிபர் ஜலால் தலபானி, 79, குர்த இனத்தைச் சேர்ந்தவர். இவர், ஈராக்கில் ஷியா மற்றும் சன்னி பிரிவு முஸ்லிம்களுக்கிடையே சமரசம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர். அண்மையில், இவரது மூளை ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டதால், பக்கவாதம் ஏற்பட்டு, நினைவிழந்தார். உடனடியாக, பாக்தாத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தற்போது அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்து உள்ளனர்.ஈராக் பிரதமர் நூரி அல்-மாலிக், மருத்துவமனைக்கு சென்று, அதிபரின் உடல் நிலை குறித்து விசாரித்தார்.



# குழந்தைகள் உயிரைக் காக்க தன்னுயிரை கொடுத்த ஆசிரியைகள்!

அமெரிக்க கனக்டிக் மாகாணத்தில் உள்ள நியூ டவுனில் சாண்டி ஹூக் என்ற தொடக்கப் பள்ளி உள்ளது. 14.12.2012 வெள்ளிக்கிழமை இந்த பள்ளியில் புகுந்த மர்ம வாலிபர் கண் மூடித்தனமாக சுட்டதில் 20 குழந்தைகள் உள்பட 28 பேரை சுட்டுக் கொன்றான் என்பதும் பலியான குழந்தைகள் 5 முதல் 10 வயதுக்குட்பட்டவர்கள் என்பதும் தெரிந்த தகவல்கள்தான்.

இந்நிலையில், துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களில் குழந்தைகளைத் தவிர 8 பேர் பெரியவர்கள். அவர்களில் 3 பேர் ஆசிரியைகள். ஒருவர் பள்ளி முதல்வர். அவரது பெயர் டாவன் கோச்ஸ்பிரங். மற்ற 2 பேர் அசிரியைகள். அவர்களது பெயர் மேரி ஷெர்லாக் (56), விக்டோரியா கோடோ (23). இவர்கள் 3 பேரும் தங்களது பள்ளி குழந்தைகளை துப்பாக்கி சூட்டில் இருந்து பாதுகாக்க தங்கள் இன்னுயிரை கொடுத்துள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது




வகுப்பறைக்குள் புகுந்து ஆடம் லான்சா துப்பாக்கியால் சுடும்போது அவர்கள் மீது குண்டு பாயாமல் தடுக்க ஆசிரியை விக்டோரியா கோடோ தனது உடலை கவசமாக்கி தடுத்துள்ளார். இதனால் உடலில் குண்டுகள் பாய்ந்து பலியானார்.

துப்பாக்கி சத்தம் கேட்டதும், ஆசிரியைகள் அனைவரும் உஷாரானார்கள். குழந்தைகளை மேஜைகளுக்கு அடியில் பதுங்க வைத்தனர். இதனால் மிகவும் பரபரப்பான சூழ்நிலை இருந்தது. ஆனால் பள்ளி முதல்வர் டாவன் கோச்ஸ்பரங்கும், ஆசிரியை ஷெர்லாக்கும் மெயின் ஹாலில் உள்ள அபாய மணியை அடித்து பள்ளி குழந்தைகளை உஷார்படுத்த ஓடினர். அப்போது அவர்களை நோக்கி ஆடம் லான்சா சுட்டு வீழ்த்தினான். அதே நேரத்தில் ஒரு ஆசிரியை கெய்ட்னின் ரோயின் என்பவர் பள்ளிக் குழந்தைகளை அருகில் இருந்த பாத்ரூமுக்குள் அடைத்து வைத்தார். சிலரை அதன் மீது ஏற்றி மறைத்து வைத்தார். இதன் மூலம் அவர் 14 குழந்தைகளின் உயிரை காப்பாற்றியுள்ளார்.

மேலும் கொலையாளியின் அம்மா நான்சி, லைசென்ஸ் பெற்று 5 துப்பாக்கிகளை வைத்திருந்ததும் அதில் 4ஐ எடுத்து கொண்டு கொலையாளி பள்ளிக்கு வந்தான் என்பதும் விசாரணையில் தெரிய வந்தது. இதனால், துப்பாக்கி லைசென்ஸ் சட்டத்தை உடனடியாக மிகக் கடுமையாக்க வேண்டுமென அமெரிக்க மக்கள் அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் பொருட்டு வெள்ளை மாளிகைக்கு ஒரே நாளில் பல் ஆயிரம் இ - மெயில்கள் வந்துள்ளதுடன் ஆங்காங்கே பலத்த விவாதமும் நடைபெறுகிறது..

இதற்கிடையில் அமெரிக்காவில் பள்ளிக்குள் புகுந்து 20 குழந்தைகளை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது அதே பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியையின் 20வயது மகன் ஆடம் லான்சா என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வீட்டில் அம்மாவைக் கொன்று விட்டு வந்து, பள்ளியில் 26 பேரை கொன்று தானும் தற்கொலை செய்து கொண்ட அவன் மனநலம் பாதித்தவன் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது குறித்து போலீசார், “ஆடம் மனநிலை பாதிக்கப்பட்டவன் என உறுதி படுத்தப்படுகிறது. வீட்டில் அம்மாவை கொன்று விட்டு 4 துப்பாக்கிகளுடன் பள்ளிக்கு வந்து இந்த கொடூரச் செயலைப் புரிந்துள்ளான். அவன் எதற்காக இதை செய்தான் என்பது தெரியவில்லை. இது தொடர்பாக அவனது அண்ணன் ரியான் லான்சா, குடும்பத்தை பிரிந்து வாழும் தந்தை பீட்டர் லான்சா ஆகியோரிடம் விசாரித்து வருகிறோம்” என்று தெரிவித்தனர்.

இன்னொரு செய்தி நிறுவனம், இந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் ஈடுபட்டிருக்கக் கூடும் என்றும் போலீசார் சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பாக ஆடம் லேன்சாவின் அண்ணன் தியான் லேன்சாவிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கவின் கட்டுப்பாடற்ற சுதந்திரமும் அதனால் ஏற்படும் ஒழுக்க சீர்கேடுகளும் வன்முறைக் கலாசாரத்தை உருவாக்கி இவ்வாறான மனநோயாளிகளை நாடு பூராவும் அலைய விட்டு இவ்வாறான வெறியாட்டங்களுக்கு வித்திடப்படுகின்றது என அங்குள்ள புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியொன்றில் ஜனாதிபதி ஒபாமா கலந்துகொண்டார். அப்போது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த குழந்தைகளின் பெயரையும் பாடசாலையின் அதிபர், ஆசிரியைகள் பெயரையும் வாசித்த அவர், குழந்தைகளைக் காப்பாற்ற அன்பு கலந்த துணிச்சலுடன் அவர்கள் போராடி உயிரை துறந்துள்ளனர் என பாராட்டினார்.

அஞ்சலி கூட்டத்துக்கு முன்னதாக துப்பாக்கிச் சூட்டில் பலியான குழந்தைகளின் குடும்பத்தினரை தனித் தனியாக நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இதன்போது தாம் 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் பங்கேற்கும் நான்காவது சந்தர்ப்பம் இதுவென்றும் ஒபாமா சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
மாத இதழ்

THELIVU 38, Moor Road, Dehiwela

Email: thelivu009@gmail.com TP: 0114942267, 0112712845

# தமிழ்த் திரைப்படங்களில் முஸ்லிம் விரோத போக்கு

"துப்பாக்கி திரைப்படத்தின் முஸ்லிம் விரோத போக்குப் பற்றி வாதப் பிரதிவாதங்களும், மன்னிப்பு நாடகங்களும் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், இன்னொரு முஸ்லிம் விரோதத் திரைப்படமெனக் கூறப்படும் கமலஹாஸனின் "விஸ்வரூபம் திரைக்குவரக் காத்திருகின்றது. திரைப் படங்களில் முஸ்லிம் விரோதப்போக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. உலக முஸ்லிம்களை இழிவுபடுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதி என்றே நாம் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

திரைப் படங்களில் முஸ்லிம்களை இழிவுபடுத்துவதும் பின்னர், அது தெரியாமல் இடம்பெற்றுவிட்டது மன்னியுங்கள் எனக்கோரி நீக்குவதும் குறிப்பாகத் திரையுலகின் வாடிக்கையான விடயங்களாகிவிட்டது மட்டுமன்றி, இது இவர்களின் திட்டமிட்ட இழிவான விளம்பர உத்தி எனவும் சந்தேகம் கொள்ள வைக்கிறது. குறிப்பாக முஸ்லிம்களை இழிவுபடுத்தினால் மற்ற சமயத்தவர்களிடத்தில் தன் கதைக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்பதோடு அவர்களது கஸானாவும் நிரம்பும் என்பதும் அவர்களது எண்ணமாக இருக்கலாம். கமலஹாஸன், விஜயகாந்த், அர்ஜுன், இயக்குனர் மணிரத்தினம் போன்ற பிரபலங்கள் தொடர்ந்து தம் படங்களில் இக்குற்றத்தைப் புரிந்து வருகின்றனர். இதில் தற்போது விஜய், முருகதாஸ் போன்றோர் புதிதாக இணைந்துள்ளனர் அவ்வளவுதான்.

தீவிரவாதத்தைத் தூண்டுவோரும் அப்பாவி மக்களைத் துன்புறுத்திக் கொல்லுவோரும் அவர்கள் முஸ்லிம் பெயர் தாங்கியிருந்தாலும்; அவர்கள் உண்மையிலேயே பயங்கரவாதிகள் என்பதுதான் எமது ஆணித்தரமான கருத்து. இவ்வாறானவர்கள் எல்லா சமூகத்திலும் ஒரு சிறு விகிதத்தினர் இருக்கவே செய்கின்றனர். அவர்களுக்காக முழு சமூகத்தையும் இழிவுபடுத்திப் படமெடுப்பதில் அப்படி என்ன இன்பம் அவர்களுக்கு என்பதுதான் புரியவில்லை.

காஷ்மீரில் அப்பாவி முஸ்லிம்களுக்கு இந்திய இராணுவத்தினர் இழைத்துவரும் கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் போன்ற கொரூர செயல், குஜராத்தில் நரேந்திர மோடியின் மனிதப் படுகொலைகள், ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்துத் தீவிரவாதக் குழுக்கள் முஸ்லிம்களுக்கு இழைத்துவரும் கொடுமைகள், இந்து தீவிரவாதிகளால் அயோத்தி பற்றி எரிந்தமை, இலங்கையில் தமிழ் பயங்கரவாத அமைப்பு முஸ்லிம்களுக்குச் செய்த கொடுமைகள், மியன்மாரில் பௌத்த மதகுருக்கள் நேரடியாகக் களத்தில் நின்று பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொளுத்திச் சாம்பலாக்கிய சமபவங்கள், ஸியோனிஸப் பயங்கரவாதிகள் பலஸ்தீன் மக்களுக்கு இழைத்துவரும் காட்டுமிராண்டிதனமான அட்டூழியங்கள், ஏன், அமெரிக்க தலைமையிலான கிறிஸ்தவ நாடுகள் உலகம் முழுவதும் செய்யும் அடாவடித்தனங்கள் போன்றவை எல்லாம் இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. ஏன் இவற்றைக் கருவாக வைத்து ஒரு திரைப்படமெடுக்க முதுகெலும்புள்ள ஒரு இந்திய இயக்குனரோ நடிகரோ முன்வருவாரா? எனவே எதார்த்தங்களுக்கு எதிராகப் படமெடுக்க முற்படுவது அபத்தமானதும் சமூக அமைதிக்கு பங்கம் விளைவிப்பதுமாகும் என்பதை அவர்கள் புரிந்து செயல்பட வேண்டும்.

அதேநேரம், படம் எப்படிப்பட்டதாயினும், முதல் நாளே முண்டியடித்துக்கொண்டு முதல் வரிசையில் நின்று திரையரங்குகளை நிரப்பும் நம்மவர்களும் நிறையவே இருக்கின்றனர் என்பதும் இவ்வாறன ரசிகர்கள் இருக்கும் வரை அவர்களின் கை ஓங்கியே இருக்கும் என்பதும் கசப்பான உண்மைகளாகும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ்த் திரையுலகில் கோலோச்சும் ஏ.ஆர். ரஹ்மான், நாஸர், அப்பாஸ், மம்முட்டி, அமீர் இன்னும் தமது பெயர்களை மாற்றி வைத்துக் கொண்டிருக்கும் எத்தனையோ முஸ்லிம் பிரபலங்களும் இவற்றைக் கைகட்டிப் பார்த்திருப்பதுதான். அவர்களால் வேறென்னதான் செய்ய முடியும்? சமூகத்துக்காகத் தமது வசதி வாய்ப்புகளை இழந்துவிட முடியுமா என்ன?



# காலித் மிஷாலின் காஸா விஜயம்

பலஸ்தீனின் காஸாவுக்கு முதல் முறை விஜயம் மேற்கொண்ட ஹமாஸ் அமைப்பின் தலைவர் காலித் மிஷால் தனது நான்கு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு 10.12.2012 திங்கட்கிழமை விடைபெற்றார். காலித் மிஷாலுடன் ஹமாஸ் அமைப்பின் உயர்மட்ட குழு உறுப்பினர்கள் இருவரும் காஸாவிலிருந்து ரபால் எல்லையூடாக எகிப்தை நோக்கி பயணமாயினர். எனினும் ஹமாஸ் அமைப்பின் துணைத் தலைவர் முஸா அபு மர்சூக் தென் காஸாவில் தமது உறவினர்களுடன் இன்னும் ஒரு சில தினங்களை கழிக்கும் நோக்கில் அங்கேயே தங்கியுள்ளார்.

காலித் மிஷால், ஹமாஸ் அமைப்பு ஆளும் காஸா பகுதிக்கு 07.12.2012 வெள்ளிக்கிழமை முதல் முறையாக விஜயம் மேற்கொண்டார். 1971-ம் ஆண்டு முஸ்லிம் சகோதரர்கள் என்ற அமைப்பில் இணைந்த அவர் பின்னர் 1987ஆம் ஹமாஸ் இயக்கத்தை தொடங்கினார். குவைத் நாட்டை ஈராக் கைப்பற்றிய பின்னர் 1991ல் ஜோர்டான் சென்றார். ஹமாஸ் இயக்கத்திற்கான நிதி ஆதாரங்களை திரட்டும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்த போது, இவரைக் கொல்ல இஸ்ரேல் உளவுப் படையினர் திட்டம் தீட்டினர். இந்த தாக்குதல் திட்டத்திலிருந்து தப்பி 2001ம் ஆண்டு கட்டார் நாட்டிற்கு இடம் பெயர்ந்து, பின்னர் 2001ல் சிரியாவில் தஞ்சமடைந்தார்.

அங்கிருந்து ஹமாஸ் போராளிகளை இயக்கி வந்த காலீத் மிஷால், இஸ்ரேல்-ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான தாக்குதல் முடிவுக்கு வந்ததையடுத்து அவர் காஸா நகரை வந்தடைந்தார்.

இதன் போது கடந்த 08.12.2012 சனிக்கிழமை ஹமாஸ் அமைப்பின் 25 ஆவது ஆண்டு பூர்த்தி வைபவமும் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பேரணியுடன் இடம் பெற்றது. எதிர்கால பலஸ்தீன தேசத்திற்கு எந்த விட்டுக் கொடுப்பும் இல்லை என்றும் இஸ்ரேலை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்றும் தலைவர் காலித் மிஷால் ஆயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் முன் தெரிவித்தார். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் பங்கேற்ற பேரணியில் ஆவேசமாக உரையாற்றிய காலித் மிஷால், பலஸ்தீனர்கள் ஒரு துண்டு நிலத்தையும் இஸ்ரேலுக்கு விட்டுக் கொடுக்க ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்றார். "பலஸ்தீனம் எமது தேசம் அதன் ஒரு துண்டுப் பாகத்தையும் எம்மால் விட்டுக் கொடுக்க முடியாது. நாம் சியோனிஸத்திற்கு எதிராகவே போராடுகிறோம். யூதர்களுக்கு எதிராகவல்ல. எமது நிலத்தை ஆக்கிரமித்தோருக்கு எதிராகவே நாம் போராடுகிறோம். போராட்டத்தின் கனியாக எமக்கு தனிநாடு கிடைக்கும். அது பேச்சுவார்த்தை மூலம் ஏற்படப் போவதில்லை" என்றும் காலித் மிஷால் குறிப்பிட்டார். 56 வயதான காலித் மிஷால் கடந்த 07.12.2012 வெள்ளிக்கிழமை கண்ணீர் மல்க காஸாவில் முதல் முறையாக காலடி எடுத்து வைத்தார். இது அவர் பலஸ்தீன மண்ணில் 45 ஆண்டுகளில் கால் பதிக்கும் முதல் சந்தர்ப்பமாகும். எகிப்தின் ரபா எல்லை ஊடாக 1.7 மில்லியன் பலஸ்தீனர்கள் வசிக்கும் காசாவை வந்தடைந்த மிஷாலுக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.


இந்நிலையில் காஸா நகரின் மேற்கில் அமைந்திருக்கும் அல் கிதாபா வளாகத்தில் மேடை அமைக்கப்பட்டு பாரிய பேரணி நடைபெற்றது. இதில் ஹமாஸ் பிரதமர் இஸ்மயில் ஹனியான் மற்றும் ஹமாஸ் அமைப்பின் துணைத் தலைவர் முஸா அபு மர்ஸுக்குடன் இணைந்து காலித் மிஷாலும் மேடையில் தோன்றினார்.

ஹமாஸ் அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் 8 தினங்கள் நீடித்த உக்கிர மோதல் இரு தரப்புக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் மூலம் முடிவுக்கு வந்து இரு வாரங்களுக்குள்ளேயே காலித் மிஷால் விஜயம் அமைந்திருந்தது.

இந்த பேரணியில் உரையாற்றிய ஹமாஸ் இராணுவ பிரிவான இஸ்ஸதீன் அல் கஸ்ஸாம் படையின் பேச்சாளர், "இஸ்ரேலுடனான மோதலின் போது நாம் எமது 10 வீதமான திறனையே வெளிப்படுத்தினோம்" என்றார். இந்நிலையில் ஹமாஸ் அமைப்பின் தலைமைப் பதவியில் நீடிப்பதற்கு காலித் மிஷால் அதிக செல்வாக்குடன் காணப்படுவதாக கருதப்படுகிறது. எனினும் தாம் தலைமை பதவியில் இருந்து விலகப்போவதாக காலித் மிஷால் கூறிவருகிறார்.

அடுத்த ஹமாஸ் தலைமை குறித்து உறுதியான நிலைப்பாடு இல்லாத கட்டத்தில் விரைவில் ஹமாஸ் உயர் குழுவில் தலைமைக்கான தேர்வு இடம்பெறவுள்ளது. எனினும் காலித் மிஷால் அளவுக்கு தலைமைக்கான செல்வாக்கு செலுத்துபவர் இல்லை என ஹமாஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காலித் மிஷாலின் காசா விஜயத்தின் போது, காசாவுக்கான ஹமாஸ் பிரதமர் இஸ்மயில் ஹனியான், மிஷாலை, 'ஹமாஸ் அமைப்பின் தலைவர்' என அழைத்ததோடு மிஷால், இஸ்மயில் ஹனியானை, 'காசாவுக்கான ஹமாஸ் தலைவர்' என அழைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்ற மாதத் தொடர்ச்சி.......

அநேக முஸ்லிம்கள் தங்கள் சொந்த வாகனங்களை போக்குவரத்துக்காக ஏற்பாடு செய்திருந்தார்கள்.
தங்கள் வீடுகளைவிட்டு வெளியே பாய்ந்து வந்த முஸ்லிம்களுக்கு இப்போது புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஐந்து முச்சந்தி சந்திப்பில் அவர்கள் அனைவரையும் வரிசையாக நிற்கும்படி கேட்கப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈயின் ஆண் மற்றும் பெண் அங்கத்தவர்கள் முஸ்லிம் மக்களிடம் அவர்கள் வைத்திருந்த பணம் உடமைகள் நகைகள் யாவற்றையும் தங்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டார்கள். ஒவ்வொரு நபருக்கும் தலைக்கு 150 ரூபாவை எடுத்துச் செல்ல

# வடபகுதி முஸ்லிம்கள் எல்.ரீ.ரீ.ஈ யினால் வெளியேற்றப்பட்ட 22வது ஆண்டு நிறைவு

-டி.பி.எஸ்.ஜெயராஜ்

தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தும் அதை தவிர்த்து அவர்கள் காட்டும் இந்த பெருந்தன்மை தமிழ் சமூகத்தை பெருமளவில் வெட்கித் தலை குனிய வைக்கிறது. ஒரு சில குரல்களைத் தவிர முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட இந்த கொடுமையை கண்டித்து எல்.ரீ.ரீ.ஈ இழைத்த குற்றத்துக்கு எதிராக சக்தி வாய்ந்த கூக்குரல் எழுப்பபடவில்லை. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு முழு நட்டஈடு வழங்கி, அவர்களது பழைய வீடுகளில் மீள்குடியேற்றி, அவர்களது சொத்துக்களை திரும்ப மீட்டுக் கொடுப்பதோடு தேவையான மாற்று ஏற்பாடுகளையும் வழங்க வேண்டும் என்று ஒரு தீவிரமான பெரிய கோரிக்கை தமிழர்களால் முன்வைக்கப்பட வேண்டும்.

வவுனியா மாவட்டம் 1981ன் குடிசன மதிப்பீட்டின்படி 6.9% முஸ்லிம்களைக் கொண்டிருந்தது. இவர்களில் பெருந்தொகையானவர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இருந்தார்கள். எனினும் எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டு பகுதியில் வாழ்ந்த ஒரு சில முஸ்லிம்களையும் நவம்பர் முதலாம் திகதிக்குள் அங்கிருந்து வெளியேறும்படி கட்டளையிடப்பட்டது.

வன்னியில் வெளியேற்ற நடவடிக்கைகள் நடைபெறும் போதும் யாழ்ப்பாண முஸ்லிம்கள் பாதிப்புக்குள்ளாகவில்லை. 1981ன் குடிசன மதிப்பீட்டின்படி யாழ்ப்பாண மாவட்டத்தின் சனத்தொகையின் 1.6%மானவர்கள் முஸ்லிம்களாவார்கள். ஆனால் யாழ்ப்பாண நகரத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் தங்களுக்கு வரக்கூடிய எந்த ஆபத்தையும் காணவில்லை. தமிழ் சகோதரர்களால் தங்களுக்கு எதுவும் நிகழாது. என அவர்கள் நினைத்தார்கள்.

அது முற்றிலும் நேர்மாறாகத் தோன்றியது. மற்றவர்களைவிட யாழ்ப்பாண முஸ்லிம்கள் மீது எல்.ரீ.ரீ.ஈ மிகவும் கடுமையாக நடந்து கொண்டது. வெளியேறுவதற்காக மிகக் குறுகிய காலக்கெடுவே அவர்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண முஸ்லிம்களில் அநேகர் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் மேற்கத்தைய நாடுகளில் தஞ்சம் கோரினார்கள். சிலர் கனடாவுக்கும் வந்தார்கள். இவர்களில் அநேகரை நான் ரொரான்ரோவில் சந்தித்து அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினேன், மற்றும் அவர்களில் சிலர் இப்போது எனது நெருங்கிய நண்பர்கள். அவர்கள் கூறிய அச்சம் தோய்ந்த கதைகளும் அவர்களின் பயங்கர அனுபவங்களும் என்னை பெருமளவு வருத்தப்பட வைப்பதாகவும் இருந்தன.

காலை 10.30 மணியளவில் ஒலிபெருக்கி பூட்டப்பட்ட எல்.ரீ.ரீ.ஈயின் வாகனங்கள் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைந்து குடும்பத்தின் ஒரு பிரதிநிதி மதியம் 12 மணிக்கு ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானத்துக்கு வரவேண்டும் என்ற அறிவிபபை விடுத்தன.

தாங்கள் செய்துகொண்டிருந்த வேலைகளையெல்லாம் அப்படியே போட்டவிட்டு மக்கள் மைதானத்தை நோக்கி விரைந்தார்கள். பி.ப 12.30 மணியளவில் புலித் தலைவர் ஆஞ்சநேயர் (பின்னாளில் இளம்பரிதி என்கிற மற்றொரு பெயரால் அழைக்கப்பட்டார்) "பாதுகாப்புக் காரணங்களுக்காக எல்.ரீ.ரீ.ஈ உயர்பீடம் சகல முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தை விட்டு இரண்டு மணித்தியாலங்களுக்குள் வெளியேற வேண்டும் எனத் தீர்மானித்துள்ளது. அப்படிச் செய்யத் தவறினால் தண்டனை வழங்கப்படும்" என அறிவித்தார்.

மக்கள் கேள்வி அவரிடம் கேள்வி கேட்கத் தொடங்கியதும் இளம்பரிதி அமைதி இழந்து "முஸ்லிம்கள் கட்டளைக்கு வெறுமே கீழ்படிய வேண்டும் அல்லது விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்





என சீறிப் பாய்ந்தார். ஆரம்பத்தில் மக்கள், இராணுவம் யாழ்ப்பாணத்தை நோக்கி படையெடுக்கப் போகிறது அதனால்தான் எல்.ரீ.ரீ.ஈ எல்லோரையும் வெளியேறும்படி கேட்டுள்ளது என்றுதான் நினைத்தார்கள். ஆனால் முஸ்லிம்களுக்கு மட்டும்தான் வெளியேறும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தாமதமாகத்தான் அவர்கள் புரிந்து கொண்டார்கள். அமைதியற்ற நிலையிலிருந்த முஸ்லிம்கள் தங்கள் உடமைகளை பொட்டலம் கட்டத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் அவர்கள் எடுத்துச் செல்லவேண்டிய பொருட்களைப் பற்றி எந்த கட்டுப்பாடும் தெரிவிக்கப்படவில்லை. எனவே அவர்கள் துணிமணிகள் மதிப்புள்ள பொருட்கள் நகை என்பனவற்றை பொதி செய்து எடுத்துக் கொண்டார்கள். புலிகளினால் பேருந்துகள் சீருந்துகள் லாரிகள் போன்றவை அவர்களின் போக்குவரத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு நபருக்கும் ஒரு செட் உடைகளை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

அற்பமான எதிர்ப்புகள் ஆங்காங்கே கிளம்பின. நான்கு பக்கமிருந்தும் நீண்ட நவீன ஆயுதங்களும் மற்றும் அடக்கும் தொனியில் எழுந்த அச்சுறுத்தல் களும் விரைவிலேயே அவர்களை மௌனமாக்கியது. ஆடைகள் நிறைந்த பெட்டிகள் மற்றும் ஏனைய உடமைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. முதலில் அவை திறக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஆடைகள் வெளியே எடுக்கப்பட்டன. கால்சட்டை அணிந்த ஒருவருக்கு மேலதிகமாக ஒரு கால்சட்டையும் ஒரு சேட்டும் மட்டும் வழங்கப்பட்டது. சாரம் அணிந்த ஒருவருக்கு மேலதிகமாக மற்றொரு சாரமும் சேட்டும் எடுக்க அனுமதி வழங்கப்பட்டது. எல்லாப் பணமும் காணி உறுதி மற்றும் அடையாள அட்டை என்பன உட்பட சகலமும் பறிமுதல் செய்யப்பட்டன.

பெண்கள் யுவதிகள் போன்றவர் களிடமிருந்த நகைகள் உருவி

13ம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எந்த ஒரு ஆண்டுமே இல்லாத அளவுக்கு உலகமே அழியப் போகிறது என்கிற பெரும் பீதியை எதிர்கொண்டது இந்த 2012 ஆம் ஆண்டுதான்! இந்த 2012-ம் ஆண்டு உலக அளவில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் என்ன என்ற ஒரு பட்டியலை பார்க்கலாம்..

ஜனவரி 10: அணு ஆயுதத் தயாரிப்பு விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தன.

பெப்ரவரி 1: எகிப்தின் போர்ட் செய்த்








மைதானத்தில் கால்பந்து ரசிகர்களிடையேயான மோதலில் 79 பேர் பலியாகினர். 1000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பெப்ரவரி 2: உறைபனிக்கு ஐரோப்பாவில் 100க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

பெப்ரவரி 2: நியூகினியா நாட்டு படகு விபத்தில் 250 பேர் பலியாகினர்.

பெப்ரவரி 6: இங்கிலாந்து அரசியாக எலிசெபத் முடிசூட்டியதன் வைர விழா நிகழ்ச்சி மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

பெப்ரவரி 15: ஹோண்டுராஸ் நாட்டு சிறையில் ஏற்பட்ட தீ விபத்தில் 360 கைதிகள் பலியாகினர்.

பெப்ரவரி 27: தொடர் போராட்டங்களைத் தொடர்ந்து ஏமன் அதிபர் அலி அப்துல்லா சலே பதவி விலகி புதிய அதிபர் பதவியேற்றார்.

மார்ச் 13 : பிரிட்டானிகா என்சைக்ளோபீடியா 244 ஆண்டுகளுக்குப் பிறகு தமது அச்சுப் பதிப்பை நிறுத்துவதாக அறிவித்தது.

ஏப்ரல் 15: பாகிஸ்தான் சிறை மீது தாக்குதல் நடத்தி 400க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் தப்பி ஓடினர்.

ஏப்ரல் 20: பாகிஸ்தான் விமான விபத்தில் 127 பேர் பலியாகினர்.

ஏப்ரல் 26: சியரலியோன் உள்நாட்டுப் போரில் போர்க் குற்றம் புரிந்ததாக லைபீரிய முன்னாள் அதிபர் டெய்லர் மீதான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

மே 5: ஜப்பானின் கடைசி அணு உலையும் மூடப்பட்டது.

மே 7: ரஷியாவின் அதிபராக 3-வது முறையாக பதவி ஏற்றார் புட்டின்.

ஜூன் 6 - நூற்றாண்டில் இரண்டாவது முறையாகவும் கடைசி முறையாகவும் "வீனஸ்" சூரியனை கடந்து சென்றது.


ஜூன்21: புகலிடம் கோரி சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா சென்றோரின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 100க்கும் மேற்பட்டோர் கடலில் மூழ்கினர்.

ஜூன் 30: எகிப்து அதிபராக முர்சி பதவியேற்றார்.

# 2012








SOE THAN WIN/AFP/GETTY IMAGES










ஜூலை 27 : லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின.

ஆகஸ்ட் 1 : செவ்வாயில் வெற்றிகரமாக தரை இறங்கியது ரோவர் விண்கலம்.

ஆகஸ்ட் 11: ஈரானில் இரட்டை நிலநடுக்கத்தில் 153 பேர் பலியாகினர்.

ஆகஸ்ட் 26 - நிலவில் கால் பதித்த முதல் மனிதனான நீல் ஆம்ஸ்ட்ராங் காலமானார்.

செப்டம்பர் 7: சிரியாவுக்கு ஆதரவு கொடுத்ததற்காக ஈரானுடனான உறவுகளை கனடா துண்டித்துக் கொண்டது.

செப்டம்பர் 11: பாகிஸ்தானின் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 315 பேர் பலியாகினர்.

செப்டம்பர் 17: தியான்யூ தீவு விவகாரத்தில் ஆயிரம் படகுகளை ஜப்பானுக்கு எதிராக அனுப்பி வைத்தது சீனா.

அக்டோபர் 15: ஜப்பான் அருகே போர்க் கப்பல்களை நிறுத்தியது சீனா.

அக்டோபர் 22-30 : அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளை கடுமையாகத் தாக்கியது சாண்டி புயல். இப்புயலுக்கு 209 பேர் பலியாகினர்.

நவம்பர் 5: அமெரிக்காவின் அதிபராக 2-வது முறையாக வெற்றி பெற்றார் ஒபாமா

நவம்பர் 14-21: பாலஸ்தீனத்தின் காசா பகுதி மீது இஸ்ரேல் பெருந்தாக்குதலை நடத்தியது. இதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 140 பாலஸ்தீனியர்கள் பலியாகினர்.

நவம்பர் 27: பீ.எல்.ஓ. தலைவர் யாஸிர் அரபாத்தின் உடல் பரிசோதனைக்காக தோண்டி எடுக்கப்பட்டது.

நவம்பர் 29: பாலஸ்தீனத்தை "பார்வையாளர் நாடு" என்ற தகுதியுடன் அங்கீகரித்தது ஐ.நா. சபை.

டிசம்பர் 5: பிலிப்பைன்ஸை தாக்கியது போபா புயல். இப்புயலில் சிக்கி 500க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

டிசம்பர் 7: ஹமாஸ் தலைவர் காலித் மிஷால் 45 வருடங்களின் பின் காஸா மண்ணை மிதித்தார்.

டிசம்பர் 11: பிரபல சித்தார் கலைஞர் ரவிஷங்கர் காலமானார்.


டிசம்பர் 13: அமெரிக்காவின் பள்ளி ஒன்றில் கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 20 பள்ளிக்குழந்தைகள் உட்பட 27 பேர் பலியாகினர்.


டிசம்பர் 21: மாயன் காலண்டரால் உலகம் அழியப் போகிறது என்ற பீதி உலகையே ஆட்டுவித்தது. ஆனால் அறிவியல் உலகம் கூறியது போல அப்படி ஒன்றும் நடக்கவில்லை

டிசம்பர் 29: பிரபல கிரிக்கட் வர்ணனையாளர் டோனி கிரேய்க் காலமானார்.

**வாசகர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பலஸ்தீனக் கனவு

ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனம் அங்கத்துவமற்ற அவதானி அங்கீகாரம் (non-member observer state) பெற்ற நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஐ.நாவில் அங்கத்துவமற்ற அவதானி அங்கீகாரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் சமர்ப்பித்திருந்தார். அதனையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் பலஸ்தீனம் வெற்றிபெற்றது. ஐ.நா.வில் அங்கத்துவமற்ற அவதானி அங்கீகாரம் பெற, 193 அங்கத்தவர்களைக் கொண்ட பொதுச்சபையின் பெரும்பான்மை ஆதரவு இருந்தால் போதுமானது. 29.11.2012 வியாழன் மாலை நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில் 132




நாடுகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்து பலஸ்தீனத்துக்கு ஐ.நா அங்கத்துவமற்ற அவதானி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளன.

அல்பேனியா, அண்டோரா, அவுஸ்திரேலியா, ஐக்கிய ராச்சியம், பஹாமாஸ், ஜேர்மனி, சிங்கப்பூர் உள்ளிட்ட 41 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. கனடா, செக் குடியரசு, இஸ்ரேல், பனாமா அமெரிக்கா உள்ளிட்ட 9 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. மூன்று நாடுகள் சமூகமளிக்கவில்லை.

1947 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி பலஸ்தீனத்தை இரு நாடுகளாகப் பிரித்து ஐநா தீர்மானம் நிறைவேற்றி இஸ்ரேலுக்கு தனி நாடு என்ற அந்தஸ்தைக் கொடுத்தது. ஆனால் 65 ஆண்டுகளின் பின்னர் அதே நாளில் அதாவது 2012 நவம்பர் 29ஆம் திகதியிலிருந்து பலஸ்தீனம ஒரு உறுப்புரிமையற்ற நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இனி ஐநா பொதுச் சபை விவாதங்களில் பலஸ்தீனம் கலந்து கொள்ளலாம் ஆனால் வாக்களிக்க முடியாது.

ஐநாவின் முழு உறுப்புரிமை பெறுவதற்கான எல்லாத் தகுதிகளும் பலஸ்த்தீனத்துக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பலஸ்தீன், உறுப்புரிமையற்ற ஒரு நாடாக சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு, கடல் சட்ட ஒப்பந்தம், சர்வதேச நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற ஐநாவின் மற்ற அமைப்புக்களில் உறுப்புரிமை கோர முடியும். நீர்வளம், கடல், வானம் ஆகியவற்றிலும் உரிமை கொண்டாட முடியும். ஆனால் ஐ.நா.வைப் பொறுத்தவரை பலஸ்தீனம் ஒரு இறைமை உள்ள நாடு அல்ல.

எனவே, ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பலஸ்தீனர்களின் நாளாந்த அவல வாழ்க்கையில் பெரிய மாற்றம் எதையும் கொண்டுவர மாட்டாது என்பதே யதார்த்தமானது. ஐ.நா அங்கத்துவமற்ற அவதானி அங்கீகாரம் வழங்கப்பட்ட போப்பாண்டவரின் அதிகாரத்திற்குட்பட்ட வத்திக்கான் வரிசையில் அடுத்ததாக பாலஸ்தீனம் சேர்ந்து கொள்கிறது. இவ்வங்கீகாரம் வெறுமனே ஒரு காகிதத் துண்டில் காணப்படும் உரிமையே என்று இஸ்ரேல் மட்டுமல்ல பாலஸ்தீன மக்களில் பெரும்பாலானோரும் கருத்துரைக்கின்றனர். ஆனாலும் இந்தப் பிரகடனத்தில் உள்ள உண்டு. ஆனால் 2011இல் ஐநா பாதுகாப்புச் சபையில் முழு உறுப்புரிமை பெறுவதற்காகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோற்கடிக்கப் பட்டதைத் தொடர்ந்து முழு உறுப்புரிமைக் கோரிக்கையைக் கைவிட்டு உறுப்புரிமை யற்ற ஒரு நாடாக பலஸ்தீனத்தை ஏற்றுக் கொள்ளும் முன்மொழிவு பொதுச் சபையில் முன்வைக்கப்பட்டது. ஏற்கனவே 132 நாடுகளால் ஒரு நாடாக தனிப்பட்ட ரீதியில் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வது பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஹமாஸும் ஏனைய இயக்கங்களும் செயற்படும் விதத்திலும் தங்கியுள்ளது.

1993இல் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பலஸ்தீன அதிகாரசபை உருவாக்கப்பட்டது. ஆனால் பலஸ்தீன அதிகாரசபை தனது வருமானத்திற்கு இஸ்ரேலிலும் அமெரிக்காவிலும் தங்கியிருக்கும் நிலை உள்ளதால் இஸ்ரேலையும் அமெரிக்காவையும் அனுசரித்துப் போக வேண்டிய நிலையில் பலஸ்தீன அதிகாரசபை உள்ளது.

பலஸ்தீனம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்றவற்றில் உறுப்புரிமை கோரினால் அமெரிக்கா அதற்கான தனது நிதி உதவிகளை நிறுத்தும் என்று மிரட்டியுள்ள அதேவேளை, இஸ்ரேலின் போர்க் குற்றங்கள் தொடர்பாக பலஸ்தீனம் குற்றவியல் நீதிமன்றத்தை நாடினால் அதற்கான பதில் நடவடிக்கைகள் மோசமானதாக இருக்கும் என இஸ்ரேல் பலஸ்தீனத்தை எச்சரித்துள்ளது.


ஐநா தீர்மானத்தின் பின்னர் பலஸ்தீனத் தலைவர் மஹ்மூட் அப்பாஸ் முறிந்துபோயுள்ள இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க தான் தயார் என அறிவித்துள்ளார். எனினும் இஸ்ரேல் மேற்குக் கரையில் தொடர்ந்தும் சட்ட விரோதக் குடியேற்றங்களை உருவாக்கின்றமையை பல நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

2007இல் பலஸ்தீனர்களின் இரு பிரிவுகளான ஹமாஸ் இயக்கமும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் மோதிக் கொண்டன. ஹமாஸ் காஸா நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. பல சிறு கூறுகளாக இஸ்ரேலால் பிரிக்கப்பட்ட மேற்குக் கரையோரத்தில் பலஸ்தீன விடுதலை இயக்கம் தனது அதிகாரத்தை செலுத்துகிறது. சில பிரதேசங்களில் இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் இணைந்து அதிகாரம் செலுத்துகின்றன. ஹமாஸ் இஸ்ரேலுடன் ஆயுத முனையில் மோதிக் கொண்டிருக்க பலஸ்தீன விடுதலை இயக்கம் பேச்சுவார்த்தை மூலம் முன்னோக்கிச் செல்ல எத்தனிக்கிறது. ஆனால் ஹமாஸ் தொடர்ந்தும் இஸ்ரேலுக்கெதிரான தனது கொள்கைப் பிரகடனத்தை மாற்றிக் கொள்ள வேண்டி நேருமா என்பதும் இஸ்ரேலின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையப்போகின்றது என்பதும் மேற்கு நாடுகள் இதனை எவ்வாறு தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்போகின்றன என்பதும் தான் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் விடயமாகும்.

எவ்வாறாயினும், பல மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை ஒரு முன்னேற்றத்தின் அறிகுறியாகவே நேக்கப்படுகின்றது. தற்போது பலஸ்தீனியர்களின் போராட்டத்தின் நியாயமும் இஸ்ரேலின் அக்கிரமமும் ஐரோப்பிய நாடுகளில் நன்கு உணரப்பட்டுள்ளன என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வல்லுறவுக்குள்ளாகி உயிருக்கு போராடிய மாணவி மரணம்










டெல்லியில் பாலியல பலாத்காரம் செய்யப்பட்ட மாணவி சிங்கப்பூர் மவுன்ட் எலிசபெத் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். பலத்த காயமுற்று இருந்த மாணவி 13 நாள் உயிருக்கு போராடி வந்தார், தொடர்ந்து செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்த நிலையில் உடலில் முக்கிய உறுப்புகள், மூளை செயல் இழந்ததை அடுத்து மாணவி உயிரிழந்தார். இந்திய நேரப்படி அதிகாலை 2.15 மணிக்கு 23 வயது மாணவியின் உயிர் பிரிந்தது.

டெல்லியில் கடந்த 16ம் திகதி ஓடும் பேருந்தில் 6 பேர் கொண்ட கும்பலால் மருத்துவ மாணவி பலாத்காரம் செய்யப்பட்டார். மாணவியை தாக்கிய அந்தக் கொடூரக் கும்பல் பலாத்காரம் செய்த பிறகு பேருந்தில் இருந்து தூக்கி வீசியது. மருத்துவ மாணவியுடன் வந்த ஆண் நண்பரையும் அந்த கும்பல் தாக்கியது. கடுமையாகத் தாக்கப்பட்ட அம்மாணவி உயிருக்கு ஆபத்தான நிலையில் டெல்லி சப்தர்ஜங் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். ஆனாலும் சிகிச்சையால் அம்மாணவியின் உடலில் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் மேலும் மோசமடைந்தது. இதனையடுத்து கடந்த 26ம் திகதி சிங்கப்பூர் மவுன்ட் எலிசபெத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் மாணவி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவியின் உடல் பிரேத பரிசோதனைக்குப் பின் இந்தியா எடுத்து வரப்பட்டுப் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அடக்கம் செய்யப்பட்டது.

டெல்லி மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்த மாணவியின் குடும்பத்தினருக்கு பிரதமர் மன்மோகன் சிங் இரங்கல் தெரிவித்துள்ளார். சிங்கப்பூர் அரசும் மாணவி உயிரிழந்ததற்கு இரங்கல் தெரிவித்துள்ளது

இதற்கிடையில், பிரபல சமூக ஆர்வலரும் பத்திரிகை பிரமுகருமாகிய அருந்ததிராய் டெல்லி கற்பழிப்பு பற்றி கூறிய சில கருத்துக்களை மிகைப்படுத்தி சில ஊடகங்கள் அவர்மீது அவதூறுகளை பரப்பிவருகிறது...

அவர்கூறிய வார்த்தைகள்...

கற்பழிப்பு எங்கு நடந்தாலும் அவை கண்டிக்கப்படவேண்டியவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் எல்லாவிஷயங்களையும் போன்று இந்த விஷயத்திலும் நம்நாட்டில் பாரபட்சம் காட்டப்படுகிறது.

குஜராத்தில் பலநூறு முஸ்லீம் பெண்களின் கற்புகள் காவிகொடூரர்களால் சூரையாடப்பட்ட போது இந்த ஊடகங்கள் ஏன் அமைதிகாத்தன? காஷ்மீரில் அபலைப் பெண்கள் இந்திய இராணுவத்தினரால் சீரழிக்கப்படும்போது அவர்களை தூக்கிலிட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்படாதது ஏன்? சட்டீஸ்கரில் ஆதிவாசிப் பெண் சோனி சோரி போலீசாரால் கற்பழிக்கப்பட்டு அவளுடைய மர்ம உறுப்பு கற்களால் சேதபடுத்தப்பட்டபோது ஏன் இவர்கள் வாயை திறக்கவில்லை?

இப்போது டெல்லியில் கற்பழிக்கபட்ட பெண் பஸ்சிலிருந்து நிர்வாணமாகத் தூக்கி வீசப்பட்டபோது நூற்றுகணக்கானோர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர அவளுக்குத் தன்னுடைய சட்டையை கழட்டிதரக்கூட யாரும் முன்வரவில்லை.. கற்பழிக்கபட்டது எந்த ஜாதியாகவும், மதமாகவும் இருந்தாலும் பாகுபாடில்லாமல் அதனை எதிர்க்கவேண்டும் இதுவே என்னுடைய கோரிக்கை என்று கூறியுள்ளார்.

சமீபகாலமாக முஸ்லீம்களுக்கும், ஆதிவாசி களுக்கும், தலித்துகளுக்கும் ஆதரவாக கருத்து தெரிவுக்கும் அருந்ததிராய்க்கு எதிராக அவரை தேசத் துரோகி எனவும் அவரைத் தாக்க வேண்டும் என்றும் ஏசியாநெட் போன்ற காவி ஊடகங்கள் மக்களை உசுப்பெத்தி விட்டுள்ளனர்...

"பெருகிவரும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களுக்கு எதிரான குரல்கள் தற்போது நாடளாவிய ரீதயாக பெரும் பிரவாகமாக உருவெடுத்துள்ளது. மத்திய, மாநில அரசுகள் நேர்மையாக செயல்படுபவர்களாயின் வல்லுறவு மற்றும் வெறுக்கத்தக்க ஏனைய குற்றச் செயல்களுக்கு முகம் கொடுக்கும் பாராளுமன்ற, மாநிலமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை உடனடியாக வெளியிடுவதோடு அவர்களது ராஜினாமா வையும் வலியுறுத்த வேண்டும். சட்ட மன்றங்களில் அங்கம் வகிக்கும் இவ்வாறான சமூக விரோத சக்திகள் தற்போது கற்பழிப்பு மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு உந்து சக்தியாக விளங்குகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களைக் கலைந்தெறிவதற்கான கடுமையான சட்டங்களை உருவாக்குவதற்கு முன் அரசியல் கட்சிகள் இவ்வாறான வர்களைத் தேர்தல்களில் நிறுத்த விடாமல் இந்திய மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும் என பிரபல பத்திரிகையாளர் கலாநிதி முஸ்தபா கமால் ஷெர்வானி கருத்து வெளியிட்டுள்ளார்.

## ஒரு குட்டிப் பிசாசு எல்லாத்தையும் தின்னுடிச்சுங்க!

முல்லா நஸ்ருதீனின் கதைகளைக் கூட குழந்தகளுக்கானதாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவை நிச்சயமாக பெரியவர்களுக்கானவைதான். ஆன்மிக சாதகர்களுக்கான சூ∴பித் தத்துவங்களை நகைச்சுவையாகச் சொல்லுகின்ற கதைகள் அவை. உதாரணமாக, மௌலானா ரூமி தன் மஸ்னவி காவியத்தில் சொல்லும் ஒரு முல்லாக் கதையைப் பாருங்கள்:



முல்லாவின் வீட்டிற்கு அவரின் வெளியூர் நண்பர்கள் வருவதாகத் தகவல் கிடைக்கிறது. வெகு தொலைவிலிருந்து பல காலம் கழித்துத் தன்னைக் காண வரும் நண்பர்களுக்கு விருந்து கொடுப்பதற்காக முல்லா இரண்டு கிலோ ஆட்டிறைச்சி வாங்கி வந்து மனைவியிடம் தருகிறார்: "அடியே! சொல்றத நல்லாக் கேட்டுக்க. வர்றவுங்க நாலு பெரிய மனுஷங்க. நல்லவிதமா இதுல கபாப் செஞ்சு வையி. என்ன புரியுதா? என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார். பல மாதங்களாகக் கொலை பட்டினி கிடந்து கால் வயித்துக்கும் அரை வயித்துக்கும் அல்லாடிக் கொண்டிருந்த முல்லாவின் மனைவிக்கு லம்ப்பாக இரண்டு கிலோ கறியைக் காணவும் ஆசை பொங்கிக்கொண்டு வந்தது. ஆகட்டும் பாத்துக்கலாம்னு செய்து வைத்திருந்த கபாப் அனைத்தையும் அவளே மொசுக்கிவிட்டாள். வீடு திரும்பிய முல்லா "கபாப் எங்கே?" என்றார். அவள் ஒன்றுமே பேசாமல் அழுதழுது வீங்கி விண்ணாந்தது போன்ற மூஞ்சியுடன் நின்றாள். "என்னடி கேக்குறேன் மண்ணு மாதிரி மசமசன்னு நிக்கிற? கபாப் எங்கே?" என்று மிரட்டினார். கண்ணைக் கசக்கிக் கொண்டே அவள் சொன்னாள், "செஞ்சு மேஜையில வச்சிட்டுக் குளிக்கலாம்னு கொள்ளப் பக்கம் போயிருந்தேங்க. வந்து பாத்தேன், நீங்க வளக் குறீங்களே ஒரு குட்டிப் பிசாசு, அது எல்லாத்தையும் தின்னுடிச்சுங்க . குட்டிப் பிசாசு என்றது முல்லா வளர்க்கும் செல்லப் பூனையை. பூனை வளர்ப்பது நபிவழி என்பதால் ஒரு சாம்பல் நிறப் பூனையைப் பிடித்து அதையும் ஏழ்மையான தவ வாழ்வுக்குப் பழக்கிக் கொண்டிருந்தார் முல்லா. மனைவி சொல்வதில் அவருக்குச் சந்தேகம் வந்தது. "கள்ளி இவள்தான் முழுங்கிவிட்டுப் பாவம் பூனை மீது பழியைப் போடுகிறாள்" என்று நினைத்துக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்து அந்தப் பூனையை எடுத்து வந்தார். "அந்தத் தராசை எடுடி என்றார். "எதுக்குங்க? என்றாள். முறைத்தார். எடுத்துத் தந்தாள். பூனையைத் தராசில் வைத்து நிறுத்தார். சரியாக இரண்டு கிலோ இருந்தது! பூனையைத் தாட்டி விட்டு மனைவியை குறுகுறுவென்று பார்த்துக் கேட்டார்: "அடியே! இது பூனைன்னா ரெண்டு கிலோ கறி எங்கே? இல்லை இதுதான் இரண்டு கிலோ கறின்னா அதைச் சாப்பிட்ட பூனை எங்கே?

இக்கதையைச் சொல்லும் மௌலானா ரூமி இதன் உள்ளிருக்கும் தத்துவத்தையும் விளக்குகிறார்கள்: "எது பருப்பொருள்? எது ஆன்மா? எது ஸ்தூலம்? எது சூக்குமம்? எது உடல்? எது உயிர்? இதுவே அதுவாய் அதுவே இதுவாய் இருக்கும் நிலையில் எப்படிப் பிரித்துச் சொல்வது அன்பர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வல்லாரையின் மகத்தான மருத்துவ குணங்கள்

வல்லாரைக் கீரையின் சத்துக்கள்:

1. இக்கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, உயிர்சத்து 'எ', உயிர்சத்து'சி' மற்றும் தாதுஉப்புக்கள் ஏராளமாக அடங்கியுள்ளன.

2. இரத்தத்திற்கு தேவையான சத்துக்களை, சரிவிகித அளவில் கொண்டுள்ளது. மூளை நன்கு செயல்படத் தேவையான ஊட்டச்சத்துக்களை, தகுந்த முறையில் பெற்றிருக்கிறது.




3. இந்தக் கீரையில் வைட்டமின்களும், தாது உப்புகளும் அதிக அளவில் உள்ளன. பொதுவாக இது உணவாகப் பயன்படுவதைவிட மருந்தாகப் பயன்படுவதுதான் அதிகம்.

4. வல்லாரைக் கீரையைச் சமைக்கும்போது புளி சேர்க்கக்கூடாது. புளி சேர்த்தால் அதன் சுவையும், மருத்துவக் குணமும் கெட்டுவிடும்.

5. சீன மற்றும் திபெத்திய மருத்துவ முறைகளிலும் வல்லாரைக்கு தனிஇடம் உண்டு.

6. வல்லாரையில் இருவகை உண்டு:
சமவெளி வல்லாரை – வெளிர் பச்சை நிற இலைகளுடையது.

7. மலைப்பகுதிகளில் வளரும் வல்லாரை: கரும்பச்சை இலைகளுடையது. இதில் மலைப் பகுதிகளில் வளரும் வல்லாரைக்கு வீரியம் அதிகம் என்று நம்பப்படுகிறது.

8. எனவே தான், இதனை சரசுவதிக் கீரையென்றும் அழைக்கின்றனர்.

மருத்துவ குணங்கள்:

1. இரத்த சுத்திகரிப்பு வேலையைச் செவ்வனே செய்யும்.

2. உடல்புண்களை ஆற்றும், வல்லமைக் கொண்டது.

3. தொண்டைக்கட்டு, காய்ச்சல், சளி குறைய உதவுகிறது, உடற்சோர்வு, பல்நோய்கள் மற்றும் படை போன்ற தோல் நோய்களை வேரறுக்கும் வல்லமைக் கொண்டது.

4. மனித ஞாபகசக்தியை வளர்க்கும் வல்லமை கொண்டது.

5. இதனைக் கொண்டு பல்துலக்கினால், பற்களின் மஞ்சள் தன்மை நீங்கும்.

6. நரம்பு தளர்ச்சியை குணமாகி, மூளைச் சோர்வை (Mental fatique) நீக்கி சிந்திக்கும் திறனை அதிகரிக்கும்.

7. அஜீரணக் கோளாறுகளை குறைக்கும்.

8. கண் மங்கலை சரி செய்யும்.

9. சீத பேதியை நிறுத்தும்.

10. இது தவிர நாள்பட்ட எக்சிமா, பால்வினை நோய்கள் வெண்குஷ்டம் போன்ற பல நோய்களுக்கும் வல்லாரை அருமருந்தாக விளங்குகிறது.


11. பிரசவத்திற்கு பின் தாயின் உடல்நிலை தேறுவதற்கு வல்லாரை இலைகளை இடித்து சாறெடுத்து, பனங்கற்கண்டோடு சேர்த்து கொடுக்கும் வழக்கம் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் உள்ளது.

12. சொறி, சிரங்கு, மாரடைப்பு, மாலைக்கண், நீரிழிவு, காக்கை வலிப்பு, காய்ச்சல், பைத்தியம் போன்ற நோய்களையும் வல்லாரை குணப்படுத்துகின்றது.

13. வல்லாரை இலையை வாயில் போட்டு மென்று விழுங்கினால் குடல் புண், குடல் நோய், வாய்ப்புண், வாய் நாற்றம் ஆகியவை அகலும்.

14. வல்லாரைக் கீரை பொதுவாக மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. ஞாபக சக்தியை வளர்க்கிறது. நரம்புத் தளர்ச்சியை கட்டுப்படுத்துகிறது. இருதய பலத்துக்கும், தாது விருத்திக்கும் உதவுகின்றது.

15. குடல் புண், காமாலை, தொழுநோய், வாதநோய், நீரிழிவு, சளி, சிறுநீர் தகராறு,



யானைக்கால் நோய், காய்ச்சல் ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது.

வல்லாரை சில எளிய வைத்தியங்கள்:

a. இரத்த சோகை (Anaemia):

1. ½ தேக்கரண்டி வல்லாரை இலைச்சாறுடன் 1 தேக்கரண்டி தேன் கலந்து 1 மாதம் அருந்தவும்.

2. பார்வை மங்கல், உடற்சோர்வு, நரம்பு தளர்ச்சி, ஆண்மை குறைவு

3. வல்லாரை இலைகளை காயவைத்து பொடித்து வைத்துக் கொள்ளவும். தினமும் ¼ தேக்கரண்டி சூரணத்தை தேன் அல்லது பசும்பாலோடு சேர்த்து அருந்தவும்.

b. ஆறாத புண்கள், எக்சிமா, சோரியாசிஸ்:

1. வல்லாரை இலையை பசும் நெய்யோடு சேர்த்து கொதிக்க வைத்து ஆறிய பின் மேலே தடவும்.

c. தூக்கமின்மை:

1. ½ தேக்கரண்டி வல்லாரைப் பொடியை 1 கப் தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் படுக்கும் முன் குடிக்கவும்.

d. ஞாபகமறதி:

1. 5 வல்லாரை இலைகளை இடித்து சாறெடுத்து ஒரு தேக்கரண்டி தேனோடு சேர்த்து தினமும் உண்ணவும்.

e. அதிகாலையில் நான்கு வல்லாரை இலைகளைப் பறித்து நன்றாக மென்று தின்று அடுத்த நான்கு மணி நேரத்திற்கு எதுவும் சாப்பிடாமல் இருந்தால், எந்த விதமான அச்சம், பயம் போன்ற பல வகையான மனநோய்களும் விலகும்.

f. தினமும் நான்கு வல்லாரை இலையுடன் இரண்டு பாதாம் பருப்பு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் உடல் வலிமை பெறும். இனிமையான குரல் வளம் உண்டாகும்.

g. வல்லாரை இலை 4, அக்ரூட் பருப்பு 1, பாதாம் பருப்பு 1, ஏலக்காய் 3, மிளகு 3 ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து அரைத்து கொஞ்சம் கற்கண்டோடு அதிகாலையில் சாப்பிட்டு வந்தால், கடுமையான இதய நோய்கள் குணமாகும்.

h. வல்லாரைச் சாறு 15 மி.லி., கீழாநெல்லி இலைச்சாறு 15 மி.லி., பசும்பால் 100 மி.லி. ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து, அதிகாலையில் சாப்பிட்டு வந்தால், முற்றிய மஞ்சள் காமாலை கூட குணமாகும்.

i. வல்லாரைச் சாறில் திப்பிலியை ஊற வைத்து உலர்த்திப் பொடியாக்கி, தினமும் காலை மாலை இரு வேளையும் ஒரு கிராம் அளவுக்குத் தேனில் கலந்து சாப்பிட்டால் சளி, கபம், இருமல் போன்றவை விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

j. வல்லாரைச் சாறில் பெருஞ்சீரகத்தை ஊற வைத்து எடுத்துப் பொடியாக்கி, தினமும் இரண்டு கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் மாதவிலக்குக் கோளாறுகள் சரியாகும்.

k. வல்லாரை இலை, பொடுதலைக் கீரை இரண்டையும் நிழலில் தனித்தனியே உலர்த்திப் பொடியாக்கி, சம அளவு எடுத்து ஒன்றாக்கி, தினமும் காலை மாலை இரு வேளையும் இரண்டு கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் சர்க்கரை நோய் குணமாகும்.

வீக்கம், கட்டிகள் மறைய:-
வல்லாரை இலையை விளக்கெண்ணெயில் வதக்கி, தொடர்ந்து வீக்கம், கட்டி ஆகியவற்றின் மீது கட்டிவர விரைவில் குணம் ஏற்படும்.

அடிபட்ட காயம், கொப்புளங்கள் குணமாக:-
இலைச்சாற்றைப் பிழிந்து சம அளவு நெய் சேர்ந்து பாதிக்கப்பட்ட இடத்தில்பூசி வர வேண்டும்.

சமைத்து உண்ணும் முறை:

1. வல்லாரைக் கீரையைச் சமைக்கும்போது புளி சேர்க்கக்கூடாது. புளி சேர்த்தால் அதன் சுவையும், மருத்துவக் குணமும் கெட்டுவிடும்.

2. வல்லாரையுடன் வெங்காயம், மிளகு, சீரகம் சேர்த்து சாம்பார் செய்து சாப்பிடலாம். உளுந்தை வறுத்து அதனுடன் வதக்கிய வல்லாரை, தேங்காய், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துத் துவையல் அரைக்கலாம். பாசிப்பருப்புடன் சேர்த்துக் கூட்டாக வைக்கலாம்.

3. இந்தக் கீரையை சாம்பார் செய்து சாப்பிடுவதன் மூலம் உடல் எரிச்சல், மூட்டு வலி, வீக்கம், சிறுநீர் மஞ்சள் நிறமாகப் போதல் போன்ற நோய்கள் குணமாகும். வல்லாரைத் துவையல் மலச்சிக்கலை அகற்றும்.

4. காலைவேளையில், பறித்த சில மணி நேரங்களில், பச்சையாக நன்கு மென்று விழுங்கி வந்தால், மூளை மிகுந்த செயலாற்றல் பெறும்.

5. காலைவேளையில், பறித்த சில மணி நேரங்களில், ஒரு கைப்பிடியளவுக் கீரையைப் பச்சையாக நன்கு மென்று விழுங்கிய பின், பசும்பால் உண்டு வர, மாலைக்கண் நோய் குணமாகும்.

6. காலைவேளையில், பறித்த சில மணி நேரங்களில் மிளகுடன் உண்டு வர உடற்சூடு தணியும்.

7. இக்கீரையை, சித்த மருத்துவர்கள் லேகியம், சூரணம், மாத்திரை போன்ற வடிவங்களில் பக்குவப்படுத்தி பயன்படுத்துகிறார்கள்.


8. இக்கீரையை, தினமும் சமைத்து உண்ணலாம். இதன் சத்துக்கள் முழுமையாகக் கிடைக்க, சித்த மருத்துவம் கீழ்கண்டவற்றை உரைக்கிறது.

1. இதனை உண்ணும் காலங்களில் மாமிச உணவுகள், அகத்திக் கீரை பாகற்காய் ஆகியவற்றினை உண்ணக்கூடாது.

2. புளி மற்றும் காரத்தினை மிகக் குறைவாகவே உண்ண வேண்டும்.

3.சிறுவர் அடிக்கடி உண்ணுதல் மிக்க நல்லது.

# தேனீக்கள்



உலகில் இதுவரை கண்டறியப்பட்ட உயிரினங்களில் ஏறக்குறைய பாதிக்கு மேல் கண்டறியப்பட்ட இனம் பூச்சி(Insect) இனமாகும். இவை இதுவரை ஒரு மில்லியன் எண்ணிக்கை வரை வகைப்படுத்தப்பட்டுள்ளது. இன்றளவிலும் கூட புதிய புதிய வகைகள் கண்டறியப்படுகின்றன. இத்தகைய பிரமாண்ட எண்ணிக்கையில் அமைந்துள்ள இந்த இனத்தில் மனிதனைக் கடித்து நோயைப் பரப்பி தீங்கை விளைவிக்கக் கூடிய வகைகளும் உண்டு. மனிதனின் இரத்தத்தை உறிஞ்சி வாழக் கூடியவைகளும் உண்டு. மனிதனுடன் போட்டிப் போட்டுக் கொண்டு தாவரங்களை அழித்து பெரும் நாசத்தை ஏற்படுத்தக் கூடிய பல வகைகளும் இருக்கின்றன. இருப்பினும் தேனீக்கள் போன்று மனிதனுக்கு நன்மையே பயக்கக் கூடிய ஈ இனம் வேறு எதுவும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இவற்றால் உற்பத்தி செய்யப்படும் தேன், பல நோய்களுக்கு மருந்தாகப் பயனாகின்றது. இத்தகைய பிரம்மாண்ட எண்ணிக்கையில் அமையப் பெற்ற இந்த இனத்தில் மிக அதிக அளவிற்கு அறியப்பட்டவைகளில் தேனீக்களும், எறும்புகளும் முதல் இடத்தை வகிக்கின்றன. இதில் இந்த தேனீக்கள் பல அம்சங்களை விதிவிலக்கான அம்சமாக அமையப் பெற்றுள்ளன. இவற்றைப் பற்றி மிக விரிவான அளவில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட பல அதிசயத் தக்க விஷயங்கள் நம்மை வியப்படைய வைக்கின்றன.

தேனீக்கள் ஆறுகால்கள் கொண்ட பறக்கும் சிறு பூச்சி இனத்தில் ஒன்றாகும். இவை பூவில் இருந்து பூந்தேனை உறிஞ்சி சேகரித்து தேனடையில் தேனாக சேகரித்து வைக்கின்றன.

இவை ஈ பேரினத்தில் ஒரு வகை ஆகும். ஈ பேரினத்தில் இன்று ஏறத்தாழ 20000 வகைகள் அறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஏழு இனங்கள்தான் தேனீக்கள் ஆகும். இந்த தேனீக்களில் மொத்தம் 44 உள்ளினங்கள் உள்ளன. அறிவியலில் தேனீக்கள் ஏபிடே (Apidae) என்னும் குடும்பத்தில் ஏப்பிஸ் (யிளை) என்னும் இனத்தைச் சேர்ந்தவை


தேன் கூடு என்பது மூன்று வகையான தேனீக்களின் கூட்டணியாகும். ஒவ்வொன்றும் வெவ்வேறான உடல் அமைப்பைப் பெற்று விளங்குகின்றன. இதுவே இவற்றின் பிரதான வேறுபாட்டு அம்சமாகும்.

1. இராணித் தேனீ (Queen-Productive Female)
2. ஆண் தேனீக்கள் (Drone)
3. வேலைக்காரத் தேனீக்கள் (Workers Bee-Non Productive Female)

ஒரு நல்ல ஆரோக்கியமான கூட்டில் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் தேனீக்கள் வரை இருக்கும். இத்தகைய பிரம்மாண்டமான எண்ணிக்கையில் இருப்பினும் கூட இவற்றிற்கிடையே எந்த விதமான நிர்வாகக் கோளாறுகளோ அல்லது குளறுபடிகளோ வருவதில்லை. ஒரு நல்ல கூட்டின் சுற்றளவு 3 மீட்டர் வரை கூட இருக்கும்.

இவற்றின் கூடு அதிகமான தேனீக்களின் எண்ணிக்கையினால் ஏற்படும் அதிக படியான எடையால் விழுந்து விடாமல் இருப்பதற்காக வேலைக்கார தேனீக்கள் மரங்களின் பிசினைக் கொண்டு அவற்றில் சில நொதியங்களைச் சேர்த்து புரொபோலிஸ் என்னும் பிசின் போன்ற பொருளைக் கொண்டு உறுதியாக ஒட்டப்படுகின்றது. மேலும் இவற்றைக் கொண்டு கூடுகளில் ஏற்படும் விரிசல் போன்ற பழுதுகளைச் சரி செய்யப்படுகின்றன.





இராணித் தேனீ

இராணித் தேனீ மற்ற தேனீக்களைக் காட்டிலும் பெரியதாக இருக்கும். இவை 16 மி.மீ நீளம் முதல் 20 மி.மீ நீளம் வரை இருக்கும். இவை 16 நாட்களுக்குப் பிறகு முழு வளர்சியடைந்து கூட்டிலிருந்து வெளி வந்தவுடன் ஏறக்குறைய 10 முதல் 18 ஆண் தேனீக்களுடன் பறந்து வெளியில் செல்கின்றது. தரை மட்டத்திலிருந்து 1000 அடி உயரத்திற்கு மேல் பறந்த நிலையிலேயே ஆண் தேனீக்களுடன் உறவு கொள்கின்றது.

அதன் மூலம் மில்லியன் கணக்கான ஆண் உயிர் அணுக்களை பெற்றுக் கொள்கின்றது. அதன் பின்னர் அவை இறக்கும் காலம் வரை உறவில் ஈடுபடுவதில்லை. அவை ஆண் ஈக்களிடமிருந்து பெற்ற அந்த உயிரணுக்களைக் கொண்டே அது இறக்கும் காலம் வரை முட்டையிட்டுக் கொண்டிருக்கும். இனப்பெருக்கத்தில் ஈடுபட்டதன் பின்னர் 10 [illegible] இறக்கின்றது. ஒரு இராணித் தேனீ ஒரு நாளைக்கு 1500 முதல் 3000 முட்டைகளையும் வருடத்திற்கு இரண்டு லட்சம் முட்டை வரையிலும் இடக்கூடிய திறன் பெற்றதாகும்.

இவை இடைவிடாது பணியில் ஈடுபடுவதால் இவற்றிற்கு ஓய்வு என்பதே இல்லை என்று சொல்லுமளவிற்கு பணியில் ஈடுபடுகினறது. இராணித் தேனீயின் உணவுத் தேவையை கவனிப்பதற்கென்றே 5 முதல் 10 தேனீக்கள் வரை அமர்த்தப்படுகின்றன. 20 முட்டை வரை இட்டதன் பின்னர், முட்டை இட்ட களைப்புத் தீர ஒரு முறை இவற்றிற்கு ஆகாரம் அளிக்கப்படுகின்றது.

ஆண் தேனீக்கள் (Drone)

ஆண் தேனீ பொதுவாக செயலற்ற நிலையில் பெரும்பகுதி நேரத்தைக் கழிக்கக் கூடியதாகும். ஒரு கூட்டில் இவற்றின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் அமைந்திருக்கும். இவை தேன் சேகரிக்க வெளியில் செல்வதுமில்லை. தங்கள் கூட்டிற்கு ஆபத்து வரும் போது அவற்றைக் காக்கும் பொருட்டு எதிரியை கடிக்கும் திறனையும் பெற்றிருக்கவில்லை. ஏனெனில் இவற்றிற்கு கொடுக்கு அமைப்பு இல்லை.

நான் ஆண் என்று வீரவசனம் பேச இவற்றிற்கு கூட்டிற்குள் எந்தத் தகுதியும் இல்லை என்பதை இவை உணர்ந்து சமர்த்தாக நடந்து கொள்கின்றன. இவை தங்கள் உணவுத் தேவை மற்றும் பாதுகாப்புத் தேவைக்கு வேலைக்காரத் தேனீக்களைச் சார்ந்து வாழ்கின்றன

இவை செய்யக் கூடிய உருப்படியான காரியம் என்னவென்றால் புதிதாகப் பொரித்து வெளிவரும் இராணித் தேனீக்களுடன் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு உயிர் விடுவதுதான். இந்த ஒரு இனப்பெருக்கக் காரணத்திற்காகவே இவை மற்றவைகளினால் சகித்துக் கொள்ளப்படுகின்றன.

வேலைக்காரத் தேனீக்கள்

மலரின் மது தேனீக்களினால் உறிஞ்சி உட்கொள்ளப்பட்டு பின்னர் அவற்றின் வயிற்றிலிருந்து வெளிவருவதுதான் இனிய நலன் பயக்கும் தேன் ஆகும். முட்டையிட்டு சந்ததிப் பெருக்கம் செய்ய இயலாத மலட்டுப் பெண் தேனீக்களே வேலைக்காரத் தேனீக்கள் ஆகும். இவைதான் அதிசய ஆற்றலும் தகவமைப்பும் பெற்று விளங்கக் கூடியவை. இந்த வேலைக்காரத் தேனீக்களால்தான் கூட்டில் இருக்கும் இராணித் தேனீ, லார்வாக்கள் மற்றும் ஆண் தேனீக்களுக்கு உணவு அளிக்கப் படுகின்றது. இவற்றின் உள்ளுறுப்புகளில் ஒன்றான மெழுகு சுரப்பியிலிருந்து (wax gland) சுரக்கும் மெழுகைக் கொண்டுதான் கூடுகள் கட்டப்படுகின்றன. மேலும் இவற்றின் வயிற்றில் அமைந்த தேன் பைகளினால் (honey sac) மலரின் குளுகோஸ் இரசாயண மாற்றம் செய்யப்பட்டு தேனாக மாற்றப்படுகின்றது.

தேனின் மருத்துவக் குணங்கள்

பல்வேறு நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாக தேன் விளங்குகிறது


உடல் பருமனாக குளிர்ந்த நீரில் தேனை கலக்கி குடித்துவர உடல் எடையை கூட்டலாம் உடல் பருமனைக் குறைக்க மிதமான வெந்நீரில் தேனை கலக்கி குடித்துவர உடல் எடையை குறைக்கலாம்.

வெற்றிலைச்சாற்றுடன் தேனை கலக்கி குடிக்க சளி, இருமல் போன்றவை நீங்கும்.

தேனீயை சுறுசுறுப்பு, கூட்டு முயற்சி, தலைமைக்கு கட்டுப்படுதல் போன்றவற்றிற்கு உதாரணமாய் கூறுவார்கள். இவை வாழ்நாளில் பறக்கும் மொத்த தூரம், பூமியை 4 முறை வலம் வந்ததற்கு சமமானதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாரின் பிதாமகன்



இந்தியாவில் பிறந்து அமெரிக்கா வில் குடியேறி உலகையே தம் திறமையால் வியக்க வைத்து அமெரிக்காவிலேயே இறந்துபோன மேதைகளின் பட்டியலில் இன்னொரு பெயராக இப்போது பண்டிட் ரவிஷங்கர் இணைந்துள்ளார். ஒரு சகாப்தத்தின் முடிவு என்று இசையுலம் கூறுமளவுக்கு மாபெரும் சித்தார் இசைக் கலைஞராக அவர் விளங்கினார்.

வயலின் இசை யஹூதி மெனுஹி னுடன் இணைந்து 1966ல் அமெரிக்காவில் ரவிஷங்கர் நடத்திய இசை நிகழ்ச்சியொன்று "WEST MEETS EAST" என்னும் ஆல்பமாக வெளிவந்தது. அதற்காக 1967ல் சேம்பர் ம்யூசிக் பிரிவிற்கான க்ராம்மி விருதினை வென்றார். பீட்டில்ஸ் இசைக்குழு உலகப் புகழ் பெற்று சக்கை போடு போட்டுவந்த காலகட்டம் அது. அந்த ஆண்டில்தான் பீட்டில்ஸ் இசைக்குழுவும் சிறந்த ஆல்பத்திற்கான க்ராம்மி விருதினைப் பெற்றிருந்தது. இந்திய செவ்வியல் இசை மீது ஈடுபாடு கொண்டிருந்த பீட்டில்ஸ் குழுவில் ஒருவரான ஹாரிஸன் ஃபோர்ட் பண்டிட் ரவிஷங்கருக்காக அமெரிக்காவில் ஏற்பாடு செய்த ஒரு இசை நிகழ்ச்சி பின்னர் ஆல்பமாக வெளிவந்து அவருக்கு இரண்டாவது க்ராம்மி விருதினைப் பெற்றுத் தந்தது. புத்தாயிரமாண்டான 2000ல் அவரின் Full Circle: Carnegie Hall 2000 என்னும் ஆல்பம் சிறந்த உலக இசைப் பேழை என்னும் பிரிவிற்கான க்ராம்மி விருதினைப் பெற்றது. இவ்வாறு மூன்று க்ராம்மி விருதுகளைப் பெற்ற அவருக்கு இப்போது அவர் இறந்த மறுதினம் வாழ்நாள் சாதனையாளருக்கான க்ராம்மி விருது அறிவிக்கப் பட்டுள்ளது.

திரைத்துறையில் அவர் சில படங்களுக்கே அவர் இசையமைத் திருக்கிறார் என்றாலும் அவை உலகின் கவனத்தைப் பெற்றன. 1950களில் அவர் முதலில் இசையமைத்த மூன்று படங்களும் இன்றளவும் உலகெங்கிலும் திரைப்படக் கல்லூரிகளில் பாடமாக உள்ளவை. வாழ்நாள் சாதனையாளருக்கான ஆஸ்கார் விருது பெற்ற சத்யஜித் ரே என்ற கலைஞனின் உன்னதப் படைப்புக்களான அபு ட்ரிலாஜி (அதில் முக்கியமாகக் கருதப்படுவது பதேர் பாஞ்சாலி) 1957ல் காபுலிவாலா என்னும் படத்தின் இசைக்காக பெர்லின் அகில உலகத் திரைவிழாவில் வெள்ளிக்கரடி விருதினைப் பெற்றார். 1982-ல் அவருடைய பெயர் ஒரிஜினல் ம்யூசிக் ஸ்கோர் பிரிவில் ஆஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் அவருக்கு அவ்விருது கிடைக்க வில்லை. படம், ரிச்சர்ட் அட்டன் பரோவின் "காந்தி"


யஹூதி மெனுஹின், ஹாரிஸன் ஃபோர்ட், ஜான் கொல்ட்ரேன், ஃபிலிப் க்ளாஸ், ஸுபின் மெஹ்தா போன்ற இசைக்கலைஞர்களுடன் பணியாற்றியுள்ள அவர், சங்கீத் நாடக் அகாதமி விருது, பத்ம பூஷன், பதம விபூஷன், பாரத ரத்னா, இங்கிலாந்து அரசவையின் நைட்ஹூட் பட்டம், ரேமன் மக்சேசே விருது, போலார் இசை விருது, யுனெஸ்கோ இசை விருது, மெல்போர்ன் பல்கலைக்கழக டாக்டர் பட்டம் என்று இப்படி ஏகப்பட்ட விருதுகளை அள்ளிக் குவித்திருக்கிறார்.

ரவிஷங்கர் பிறந்த சூழலில் இருந்து தொடங்கி அவரின் வாழ்க்கையைப் படிக்கும் யாரும் மனித உறவு நிலைகளின் உள்மடிப்புகள் நிறைந்த ஒரு நாவலைப் படித்துக்கொண்டிருக்கும் உணர்வை அடையாமல் இருக்க முடியாது. ரவிஷங்கரின் இரண்டு சுயசரிதை நூல்கள் மூன்று காலகட்டங்களில் வெளிவந் துள்ளன: My Music My Life (1968) மற்றும் Raga Mala : The Autobiography of Ravi Shankar (1997).

07.04.1920ல் வாரணாசியில் பிறந்த ரவிஷங்கருக்கு அவரின் தந்தை ஷ்யாம் ஷங்கர் (தாய்: ஹேமாங்கினி தேவி) சூட்டிய பெயர் ரொபீந்த்ரொ ஷொங்கர் ச்சொவ்திரி. ஏழு சகோதரர்களில் கடைக்குட்டி அவர். தந்தை ஷ்யாம் ஷங்கர் பின்னாளில் வழக்கறிஞராகப் பணியாற்ற லண்டன் சென்றபோது அங்கே இன்னொரு திருமணம் செய்துகொண்டார். வாரணாசியில் அன்னையின் அரவணைப்பில் வளர்ந்த ரவிஷங்கர் தன் எட்டு வயதில்தான் தந்தையை நேரில் பார்க்க முடிந்தது! அவரின் அண்ணன் உதய் ஷங்கர் ஒரு நடனக் கலைஞர். உலகெங்கும் சுற்றுப்பயணம் செய்து இந்திய செவ்வியல் நடனக் கலையைப் பரப்பியவர்.

ரவி ஷங்கர் தன் பத்தாம் வயதில் அண்ணன் உதயுடன் ஐரோப்பிய செவ்வியல் இசைக்கான மையமான பாரீஸுக்குச் சென்றார். அப்போதும் மூன்று வருடங்களுக்குப் பின் அக்குழு அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்தபோதும் ரவிஷங்கர் ஃபிரென்ச்சும் மேற்கத்திய செவ்வியல் இசையுடன் ஜாஸ், ராக் போன்ற புதிய இசை வடிவங்களையும் கற்றார்.

ரவிஷங்கரின் குருநாதர் சிதார் கலைஞர் உஸ்தாத் அலாவுதீன் கான். அவருடைய மகளான அன்னபூர்ணா தேவிதான் ரவிஷங்கரின் முதல் மனைவி! கர்நாடக சங்கீத உலகில் நீங்கள் வித்வான் அப்துல் கரீம் என்றெல்லாம் பார்க்கவே முடியாது. நாதஸ்வர வித்வான் ஷேக் சின்ன மவ்லானா குடும்பம் மட்டும் ஒரு விதிவிலக்கு. கும்பகோணத்தில் சாகுல் ஹமீது என்று ஒருவர் அரை





நூற்றாண்டுக்கு முன் கர்நாடக வித்வானாக இருந்தார். வடக்கில் உள்ள இசைக்கலைஞர்கள் எல்லாம் திருமண பந்த உறவுகளுடன் ஒரே குடும்பமாக இருக்கிறார்கள், உஸ்தாத் அலாவுதீன் கானின் மகன் உஸ்தான் அலி அக்பர் கான் (இவர் சரோத் கருவியில் மேதை. 2009-ல் கலிஃபோர்னியாவில் காலமானார்.) மகள் பெயர் அன்னபூர்ணா தேவி. அக்பரின் நவரத்தினங்களில் ஒருவரான தான்சேனின் பரம்பரையில் வருகிறது இவர்களது குடும்பம். தான்சேனின் வாரிசுகளிலும் சிலருக்கு முஸ்லிம் பெயர்களும் சிலருக்கு இந்துப் பெயர்களும் இருப்பதை நீங்கள் காணலாம். உதாரணமாக, அவரின் மகள் பெயர் சரஸ்வதி. சரோத் கலைஞரான உஸ்தாத் அம்ஜத் அலீ கானின் மனைவியின் பெயர் சுபாசினி. பிள்ளைகளின் பெயர்களோ அமான் அலீ பங்கஷ் மற்றும் அயான் அலீ பங்கஷ்.

தன் குருவின் மகளான அன்னபூர்ணா தேவியைப் பண்டிட் ரவிஷங்கர் காதல் திருமணம் செய்து கொண்டார் என்று ஓஷோ தன் சுயசரிதையில் குறிப்பிடுகிறார். அப்போது அன்னபூர்ணா தேவிக்கு வயது பதினான்கு! ரவிக்கு இருபது. அடுத்த வருடமே அவர்களின் ஒரே வாரிசான சுபேந்திரா ஷங்கர் பிறந்தார். அவரும் பிற்காலத்தில் சித்தார் கலைஞராக இருந்து 2007ல் மறைந்தார். இந்தத் திருமண உறவு சில ஆண்டுகளே நீடித்தது. தற்போது மும்பையில் வாழ்ந்து வரும் அன்னபூர்ணா தேவி இசைகுருவாகப் பல சிறந்த இசைக்கலைஞர்களை உருவாக்கி யவர். ரவிஷங்கர் ஐரோப்பா, அமெரிக்கா என்று பட்டையைக் கிளப்பிக் கொண்டிருந்த நாட்களிலேயே இவர் மேடை யேறுவதை நிறுத்தி வீட்டிற்குள் முடங்கிவிட்டார். அன்னபூர்ணா சுர்பஹார் என்னும் கருவியில் தேர்ந்தவர். ரவியுடன் சேர்ந்து ஆரம்பத்தில் ஜுகல்பந்திகள் வாசித்திருக்கிறார். ஸ்வபன் குமார் பந்தோபாத்யாய் எழுதிய அவரின் சுயசரிதை An Unheard Melody: Annapurna Devi. அதில் வேறு விதமான சித்திரங்களை நாம் காண்கிறோம். அன்னபூர்ணா தேவியின் மேதைமை அபூர்வமான ஒன்று. ரவிஷங்கரை விடவும் அவரின் மேதைமை மேலானதாக இருந்ததாம். சொல்லப்போனால், அவரின் குருவும் தந்தையுமான அலாவுத்தீன் கானை விடவும் அதிக திறமை அவரிடம் இருந்தி ருக்கிறது. ஒரு கலைஞனாக இதுவே ரவிக்கு அவரிடம் காதலை உருவாக்கியதாகவும் அதன்பின் ஒரு கணவனாக அவர் அந்தப் பெண்ணின் மீது பெற்ற அதிகாரம் அவரின் மனத்தில் இருந்த பொறாமைத் தீயை வளர்த்து உக்கிரமான ஒரு பழிவாங்கலாக வெளிப்பட்டது என்கிறது இந்நூல். "பொது மேடைகளில் நான் வாசிப்பதை நிறுத்திக் கொண்ட தற்கான உண்மையான காரணத்தை நான் என்னுடன் என் கல்லறைக்கு எடுத்துச்

14ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தத்துவமேதை பிளேட்டோ

அக்காலத்தில் கிரேக்கநாடு நான்கு நகர அரசுகளைத் (City states) தன்னகத்தே கொண்டிருந்தது. அந்நகர அரசுகளில் பிரசித்தி பெற்றவை ஏதென்சும், ஸ்பார்ட்டாவும் ஆகும். புகழ்பெற்ற ஏதென்ஸ் நகரில் உலகப் புகழ்பெற்ற சாக்ரடீஸ் என்ற மாமேதை வாழ்ந்து வந்தார். அவர் தம் அறிவால், சிந்தனை ஆற்றலால், தத்துவ விளக்கங்களால் ஏதென்ஸ் நகர இளைஞர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார். அவ்வறிஞரின் மாணவர்தான் பிளேட்டோ, சாக்ரடீஸ் சொன்ன உண்மைகளை, வகுத்த பாதையை உலகுக்கு உணர்த்தியவர். சாக்ரடீஸ் என்ற கதிரொளியைத் தம் எழுத்தால், பேச்சால் பிரதிபலித்தவர்தான் பிளேட்டோ. இவர் சாக்ரடீசின் மறுபதிப்பு. இவரது வரலாறு சாக்ரடீசின் வரலாற்றுடன் இணைந்தது.

ஏதென்ஸ் நகரில் இவர் வாழ்ந்த காலம் கி.மு. 427 முதல் 347 வரை. சரியாக 80 ஆண்டுகள் வாழ்ந்து தம் ஆசிரியர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்தவர். ஏதென்ஸ் நகரம் சாக்ரடீசுக்கு ஹெம்லாக் (Hemlock) என்ற நஞ்சினை அளித்து மிகக் கொடூரமான முறையில் தண்டித்தது. ஏதென்ஸ் நகர இளைஞர்களை எல்லாம் இவர் தம் சீர்திருத்தக் கருத்துக்களால் கெடுத்துவிட்டார் என்பதே அக்குற்றச்சாட்டு. அரசு தனக்கு அளித்த தண்டனையை சாக்ரடீஸ் மனமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு இன்னுயிர் நீத்தார். இந்நிகழ்வு பிளேட்டோவின் உள்ளத்தை உலுக்கியது. நெஞ்சு வேதனையால் துடித்தது. எந்தக் குற்றமும் செய்யாமல், ஏதென்ஸ் நகர இளைஞர்களின் உள்ளங்களைப் பண்பட்ட சிந்தனைகளால் தம்வசம் ஈர்த்த சாக்ரடீஸ் பெற்ற தண்டனை அந்நகர இளைஞர்களிடையே மாபெரும் விழிப்புணர்வைத் தூண்டியது. இங்ஙனம் விழிப்புற்ற பிளேட்டோ தம் ஆசிரியர் பணியை நிறைவு செய்ய அகாடிமியா (Academia) எனும் தத்துவப் பள்ளியைத் (School of Philosophy) தொடங்கினார். அப்பள்ளி ஏதென்ஸ் நகரின் பொதுமக்கள் பூங்காவில்(garden), ஓர் ஆற்றங்கரையின் எழில்மிகு சூழலில் காண்-போரைக் கவரும்வகையில் பல்வேறு மரங்களாலும், சீர்மிகு சிலைகளாலும் அலங்கரிக்கப்பட்டது. அப்பள்ளியின் மூலமாகத் தான் பிளேட்டோ சாக்ரடீஸின் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் சென்றார்.

அப்படி சாக்ரடீசும், அவரது மாணவர் பிளேட்டோவும் மக்களுக்கு உணர்த்திய தத்துவ உண்மைகள் எவை? அவை எத்தன்மையானவை? அவை அக்காலத்திற்கும், இக்காலத்திற்கும், எக்காலத்திற்கும் மக்கள் மத்தியில் நிலைத்து நின்று நல்வழி காட்டுபவை. உலக மக்கள் அனைவரையும் அன்புவழியில், அறவழியில், அமைதி வழியில் வாழ வழிகாட்டுபவை. அவர்கள் காட்டிய உண்மைகளைச் சுருக்கமாக இங்குக் காண்போம், அவர் வழி தொடர்வோம்.

பிளேட்டோ தத்துவ மேதை சாக்ரடீஸ் வழி வந்த தன்னிகரில்லா மாணவன். அவர் சொல்லிச் சென்ற தனிமனித ஒழுக்கம்பற்றிய உண்மை பொன்னே போல் போற்றத்தக்கது. பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியது. எவன் ஒருவன் தனது வாழ்வில் நியாயத்தை (Justice) நடுநிலையைப் பின்பற்றுகிறானோ அவன் அதிஉன்னதமான (eternal) மகிழ்ச்சியை அடைகிறான். நடுநிலையிலிருந்து, நியாயத்திலிருந்து விலகிச் செல்பவன் நீங்காத துன்பத்தைப் பெறுகிறான். ஆகவே, நியாயம் நன்மையையும், அநியாயம் தீமையையும் அளிக்கும்.

அடுத்து சமுதாய ஒழுக்கம்பற்றி இவர் சொல்லிச் சென்ற உண்மைகள் வரலாற்றுப் புகழ்மிக்கவை. இன்றைய பிஞ்சுகளும், நாளைய சமுதாயச் சிற்பிகளும் ஆகிய நீங்கள் உங்கள் உள்ளங்களில் ஆழப் பதிவு செய்ய வேண்டியவை. பிளேட்டோ படைக்க நினைத்த சமுதாயம் ஓர் அதிஉன்னதமான சமுதாயம். அச்சமுதாயம் 'Republic' என்ற அவரது நூலில் யுடோபியா (Utopia) என்று அழைக்கப்பட்டது. தனி மனிதனின் மகிழ்ச்சிக்காக சமுதாய நலன் பாதிக்கப்படக் கூடாது என்பதே இவர் காண விழைந்த யுடோபியன் சமுதாயத்தின் நியதி. சுருக்கமாகச் சொல்வதானால் இச்சமுதாயத்தில்(Utopia), உண்மை இல்லை ஏனெனில் அங்கு பொய்யுரை இல்லாததால்; வண்மை இல்லை (வள்ளல் தன்மை) ஒரு வறுமை இல்லாததால்; உயர்வு இல்லை ஏனெனில் ஆங்கு தாழ்வு இன்மையால்; இன்பம் இல்லை ஒரு துன்பம் இன்மையால்.

இத்தகு ஒப்பற்ற சமுதாயத்தைத்தான் பிற்காலத்தில் பல பெரியார்கள் படைக்க விரும்பி, தம் வாழ்நாள் முழுதும் முயன்றனர். அழகு, நீதி, அன்பு ஆகிய இவற்றில் ஊன்றி இருப்பவர்கள் நல்லவர்கள். அவர்களுடைய வாழ்வு இன்பமயமானது. அழகு என்பது அழியாமையின் உறைவிடம். அழகான ஒன்றைப் படைப்பதால் அழியாமையை எய்துகிறோம் என்கிறார் பிளேட்டோ.

- சாரதாமணி

# இந்த நாட்டில் மட்டுமே



இந்த நாட்டில் மட்டுமே பெண்கள் யாருமே வாகனங்கள் ஓட்டவும் முடியாது; தனியே வெளியே செல்லவும் முடியாது.

இந்த நாட்டில் மட்டுமே பாராளுமன்றமும் இல்லை. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவையும் இல்லை. ஒரே ஆட்சியாளரும் முப்படைத் தளபதியும் மன்னர் மட்டுமே. அவரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவர்.

இந்த நாட்டில் மட்டுமே வறுமைக் கோட்டில் வாழும் பல லட்சம் மக்களைக்கொண்டிருந்தாலும் 7000 பேருக்கு மேற்பட்ட அரச குடும்ப உறுப்பினர்களுக்கு மாதாந்த வேதனமாக பல மில்லியன் டாலர்கள் செலவிடப்படுகின்றது.

இந்த நாட்டில் மட்டுமே நாட்டின் 1/5 பங்கு எண்ணெய் வருமானத்தை ஐந்து பேர் பங்கிட்டுக்கொள்கின்றனர்.

இந்த நாட்டில் மட்டுமே ஆயுதக் கொள்வனவு உலகம் இதுவரை காணாத அளவு பெரியது. அமெரிக்காவுடனான அதன் அண்மைய ஆயுதக் கொள்வனவு 60 பில்லியன் டலருக்கு மேல்.

இந்த நாட்டில் மட்டுமே ஒவ்வொரு மாநிலமும் அரச குடும்ப உறுப்பினர்களால் அவர்கள் விரும்பியவாறு ஆளப்படுகின்றது. இங்கு கருத்து சுதந்திரம் கிடையாது. ஊடகங்கள் யாவும் அரச குடும்பத்துக்கு செந்தமானது. அவர்களது கருத்தே நாட்டு மக்களின் கருத்தாகும்.

இந்த நாட்டில் மட்டுமே நாட்டின் செல்வங்கள் யாவும் அரச குடும்பத்துக்கே சொந்தம். யாராவது ஒரு சிறு பங்கைப் பெற வேண்டுமானால் இளவரசர்களின் கைகளை முத்தமிட்டு அவர்களது கதவடியில் பிச்சைக்காரர்களைப் போல காத்திருக்க வேண்டும்.

இந்த நாட்டில் மட்டுமே மக்களுக்கு நாட்டின் ஆட்சியில் எந்த விதமான பங்கும் இல்லை. எந்த விடயத்திலும் மக்களின் கருத்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. உள்ளூராட்சி மன்றங்களில்கூட மக்கள் பிரதிநிதிகள் இல்லை.

இந்த நாட்டில் மட்டுமே கற்பனைக்கெட்டாத அளவு ஊழல் தலைவிரித்தாடுகிறது.

இந்த நாட்டில் மட்டுமே ஆட்சி மாற்றத்துக்கான ஒரே வழி மரணம் மட்டுமே.

இந்த நாட்டில் மட்டுமே இவையெல்லாம் ஒன்றாகவும் ஒரே நேரத்திலும் நடைபெறுகின்றன.

சவுதி அரேபியா என்ற நாடே அது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட பகுதி முஸ்லிம்கள்..............5ம் பக்கத் தொடர்ச்சி

எடுக்கப்பட்டன. சில பெண் அங்கத்தவர்கள் மிகவும் கொடூரமான முறையில் காதுத் தோடுகளை காதுத் துளைகளில் இருந்து இரத்தம் வரும்படி இழுத்து எடுத்தார்கள். சிறுவர்களைக்கூட விட்டு வைக்கவில்லை. ஒரு கைக்கடிகாரம் கூட மிஞ்சவில்லை. இந்த முழு நடவடிக்கையையும் மட்டக்களப்பை சேர்ந்த கரிகாலனே மேற்பார்வை செய்ததாக யாழ்ப்பாண முஸ்லிம்கள் பின்னர் தெரிவித்தார்கள்.

கிட்டத்தட்ட 35 வரையான செல்வந்த முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டார்கள். அவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யினால் தடுத்து வைக்கப்பட்டார்கள். சில முஸ்லிம் நகை வியாபாரிகள் மறைத்து வைத்துள்ள தங்கம் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்காக சித்திரவதை செய்யப்பட்டார்கள். மற்றவர்கள் முன்னால் வைத்து பலமாக அடித்ததில் ஒரு நகை வியாபாரி கொல்லப்பட்டார். பின்னா அவர்களை விடுதலை செய்வதற்காக பெருந்தொகையான பணம் கோரப்பட்டது. சிலர் 30 லட்சம் ரூபா வரை செலுத்தினார்கள். எனினும் 13 பேர் திரும்பி வரவேயில்லை, மற்றும் அவர்கள் இறந்துவிட்டதாக ஊகிக்கப் படுகிறது.

யாழ்ப்பாண முஸ்லிம்களை வெளியேற்றிய பின்னர் எல்.ரீ.ரீ.ஈ அந்த பிரதேசத்தை கயிறுகளினால் சுற்றிக் கட்டியது. 1990 நவம்பர் 2ந்திகதிய வீரகேசரி பத்திரிகை முஸ்லிம்கள் திரும்பி வரும்வரை அவாகள் உடமைகளை பாதுகாப்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது என செய்தி வெளியிட்டது. திகைப்பிலாழ்ந் திருந்த சில முஸ்லிம்கள் கூட தங்கள் வெளியேற்றம் தற்காலிகமான ஒன்று என்றுதான் எண்ணினார்கள். இந்த விவகாரங்களின் உண்மை நிலையை அறிந்து கொள்ள அவர்களுக்கு பல மாதங்கள் பிடித்தன. காலம் செல்லச் செல்ல ஒரு காலத்தில் செல்வச் செழிப்பிலிருந்து இப்போது பரம ஏழையாகிவிட்ட முஸ்லிம்கள் இந்த புதிய சூழலுடன் இணங்கிப்போக முடியாதவர் களாக இருந்தார்கள். குறிப்பாக யாழ்ப்பாண முஸ்லிம்களை பொறுத்த மட்டில் எல்.ரீ.ரீ.ஈ மிகவும் குரூரமாக நடந்து கொண்டது. யாழ்ப்பாண முஸ்லிம்கள், யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரத்தின் இரண்டு அல்லது மூன்று வட்டாரங்களில் மிகவும் அடர்த்தியாக வசித்து வந்தார்கள் சோனக தெரு, ஓட்டுமடம், மற்றும் பொம்மைவெளி போன்றவைகளே அவர்களது பகுதிகள். யாழ்ப்பாண சமூகத்தின் ஒரு ஓரங்கிணைந்த பகுதியாகவே அவர்கள் வாழ்ந்தார்கள். முன்பு ஒரு காலத்தில் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண புதிய சந்தை கட்டிடத்தை கட்டியபோது, அதில் கிட்டத்தட்ட முஸ்லிம்களின் ஆதிக்கமே நிறைந்திருந்தது. வன்பொருட்கள்,லாரி போக்குவரத்து நகை வியாபாரம் மற்றும் இறைச்சி வியாபாரம் என்பன யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களின் ஆதிக்கத்தி லேயே இருந்தன.

யாழ்ப்பாண முஸ்லிம்கள், யாழ்ப்பாணத் தமிழர்களைப் போலவே ஒரு பெருமையான கல்விப் பாரம்பரியத்தை கொண்டிருந்தார்கள். முன்னாள் அரச உத்தியோகத்தரும் மற்றும் ஸகிரா கல்லூரி அதிபருமான ஏ.எம்.ஏ அசீஸ், உச்ச நீதிமன்ற நீதியரசர் அப்துல் காதர், மேன்முறையீட்டு நீதிபதி எம்.எம்.ஜமீல், கல்விப் பணிப்பாளர் மன்சூர் போன்றவர்கள் யாழ்ப்பாண முஸ்லிம்களில் சில முன்னணி பிரமுகர்கள். மாநகரசபை அங்கத்தவர்களும் அவர்களில் இடம்பெற்றுள்ளார்கள், இரண்டு மாநகரசபை அங்கத்தவர்களான பசீர் மற்றும் சுல்தான் ஆகியோர்கள் யாழ்ப்பாண உதவி மேயர் மற்றும் பதில் மேயர் ஆகக் கடமையாற்றியுள்ளார்கள்.

வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்ட பெரும்பாலான முஸ்லிம்கள் புத்தளம் மாவட்டத்தில் தற்காலிகமாக குடியமர்ந்தார்கள். அநேகர் வவுனியா, நீர்கொழும்பு, மற்றும் கொழும்பு ஆகிய இடங்களை நாடிச் சென்றார்கள். ஏனையோர் அனுராதபுரம், குருநாகல், கம்பஹா, மாத்தளை, மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்தார்கள். பெருமளவிலான யாழ்ப்பாண முஸ்லிம்கள் வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றார்கள்.

வடக்கின் பெருநிலப் பரப்பிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் அதிகளவிலான செறிவு கல்பிட்டி மற்றும் புளிச்சகுளம் பிரதேசங்களிலேயே இருந்தது. யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் அதிகளவிலானவர்கள் புத்தளம் தில்லையாடி பகுதியில் இருந்தார்கள்.

அதேவேளை எல்.ரீ.ரீ.ஈ, முஸ்லிம்களின் வீடுகளில் எஞ்சியிருந்த உடமைகளில் அநேகமாக எல்லாவற்றையும் கொள்ளையடித்தது. அநேக வீடுகளின் கூரையில் வேய்ந்திருந்த ஓடுகள், மரச்சட்டங்கள், கதவுகள், யன்னல்கள் போன்றவைகள் கூட உருவப்பட்டன. யுத்த நிறுத்தம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வடக்குக்கு திரும்பி வந்த சில முஸ்லிம்கள் தங்கள் உடமைகள் அடுத்த வீடுகளிலும் மற்றும் வியாபார நிலையங்களிலும் இருப்பதைக் கண்டனர். அநேக முஸ்லிம்களின் காணிகள், வீடுகள் மற்றும் வாகனங்கள் என்பன சட்டத்துக்கு புறம்பாக எல்.ரீ.ரீ.ஈ யினால் தமிழர்களுக்கு விற்பனை செய்யப் பட்டிருந்தது.

1981ம் அண்டு குடிசன மதிப்பின்படி வட மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் மொத்த சனத்தொகை 50,991 அல்லது 4.601 % ஆகும். 1990ல் இந்த வெளியேற்றம் நடந்தபோது அப்போதிருந்த முஸ்லிம்களின் சனத்தொகை கிட்டத்தட்ட 81,000 என்று முஸ்லிம் சமூகத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். இதில் ஏறக்குறைய யாழ்ப்பாணத்தில் 20,000, மன்னாரில் 45,000, முல்லைத்தீவில் 7000, வவுனியாவில் 8000 மற்றும் கிளிநொச்சியில் சுமார் 1000 என்பன உள்ளடங்கும். இவை தவிர வவுனியா மற்றும் நயினாதீவுகளைச் சேர்ந்த சுமார் 7500 பேர்களும் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இந்த ஒட்டுமொத்த வெளியேற்றம் நடைபெற்ற உடனடியாக 67,000 பேர்கள் தங்களை உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் பதிவு செய்துள்ளார்கள். மீதியுள்ளவர்கள் முகாம்களுக்கு வெளியே உறவினர்களுடனும் மற்றும் நண்பர்களுடனும் தங்கியிருந்தார்கள்.

22 வருடங்களின் பின்னர் இந்த சனத்தொகை இயற்கையான பெருக்கம் காரணமாக இரண்டு மடங்காக உயர்ந்திருக்கும் என நம்பப்படுகிறது. வடபகுதி முஸ்லிம்களில் 75% மானவர்கள் வடக்குக்கு திரும்பச் சென்று மீள் குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்து தங்களை பதிவு செய்திருந்தாலும் 2012 குடிசன மதிப்பின்படி வடபகுதி முஸ்லிம்களில் ஒரு சிறிய அளவினரே தங்கள் தாயகங்களுக்கு நிரந்தரமாகத் திரும்பி வந்துள்ளார்கள்.

வட மாகாணத்திலுள்ள முஸ்லிம் சனத்தொகை மற்றும் அவற்றின் விகிதாச்சாரம், என்பன முறையே 2012 குடிசன மதிப்பின்படி கீழ் குறிப்பிட்ட மாவட்டங்களில் பின்வருமாறு உள்ளன. மன்னார் 16,087 - 16.2%, வவுனியா 11,700 - 6.8%, யாழ்ப்பாணம் 2139 - 0.4%, முல்லைத்தீவு 1760 - 1.9%, கிளிநொச்சி 678 - 0.6%. 1990 ல் கட்டாய வெளியேற்றம் நடைபெற்ற நேரத்திலிருந்த மதிப்பீடுகளுடன் ஒப்பீடு செய்கையில், அப்போது முற்றாக பாதிக்கப்படாத வவுனியாவை தவிர ஏனைய மாவட்டங்களில் முஸ்லிம்களின் சனத்தொகையில் பாரிய குறைவு என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வட மாகாணத்தின் தற்போதைய முஸ்லிம்களின் சனத்தொகை 32,396 அல்லது 3.061 % மட்டுமே.

இந்த குறைவான முஸ்லிம் மீள்குடியேற்றத்துக்கு சமூக, கலாச்சார, பொருளாதார, மற்றும் அரசியல் காரணங்கள் இருக்கலாம். இந்த சிக்கலான காரணங்களை மற்றொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராய்ந்து விளக்கப்படும். இப்போதைக்கு என்னால் முன்பு எழுதப்பட்ட சில குறிப்புகளை மீண்டும் எழுதி இந்த விடயத்தை முடிக்க விரும்புகிறேன்.

" வெளியேற்றப்பட்ட சில முஸ்லிம்களின் உயர்ந்த பண்புகளில் ஒன்றாக நான் காண்பது, தமிழர்கள் மீது அவர்களுக்கு வெளிப்படையான காழ்ப்புணர்ச்சி குறைவாக இருப்பதையே. தங்களது இக்கட்டான நிலமைக்கும் அதற்கான காரணத்துக்கும் பொறுப்பானவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யினரே என அவர்கள் உணர்ந்துள்ளார்கள். சாதாரண தமிழர்களை அவர்கள் அதற்காக பழி சொல்வதில்லை. அரசாங்கத்தினதும் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ யினதும் கரங்களில் அகப்பட்டு அல்லல்படும் தமிழர்களின் நிலையை கண்டு அவர்களும் தமிழர்களுக்காக பரிதாபப் படுகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மொழி, அதன் இலக்கியம் மற்றும் ஊடகங்கள் என்பனவற்றின் மீதுள்ள அவர்களது பற்று கொஞ்சமும் குறையவில்லை. இன்னும் சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தைப் பற்றிய தங்கள் பழைய நினைவுகளை ஆவலுடன் நினைவுகூர்ந்து வடக்கும் தங்களது தாயகமே என அவர்கள் பெருமையுடன் வலியுறுத்துகிறார்கள்.

நல்லிணக்கம் பற்றி தேசிய அளவிலும் மற்றும் உலக அளவிலும் பேசப்பட்டு வரும் இப்படியான சூழலில், வடக்கிலுள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இரு பகுதியினரிடையே நல்லிணக்கம் ஏற்படுத்த வேண்டியது கண்டிப்பாக அவசியம். ஒரு உறுதியானதும் உண்மையானதுமான நட்புக்கரம் முஸ்லிம்களை நோக்கி நீட்டப்பட வேண்டும். 22 வருடங்களுக்கு முன்னர் எல்.ரீ.ரீ.ஈ யினால் நடத்தப்பட்ட திரளான வெளியேற்றத்துக்காக, நீதியானதும் பணிவானதுமான ஒரு முற்று முழுதான வெகுஜன மன்னிப்பை முஸ்லிம்களிடம் கோரவேண்டும்.


நன்றி: தேனீ
மொழிபெயர்ப்பு: எஸ்.குமார்

ஜம்மியத்துல் உலமாவுடன்..............1ம் பக்கத் தொடர்ச்சி

உணவு தொடர்பாக தமது இயக்கத்துக்கு எந்தவித முரண்பாடும் கிடையாது எனக் கூறிய அவர், முரண்பாடெல்லாம் அந்தப் பணம் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுக்கு அனுப்பப்படுவது தொடர்பானது மட்டுமே எனக் கூறியுள்ளார். மேலும் இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாகவும் ரகசியப் போலிஸ் மற்றும் வருமான வரித் திணைக்களம் ஹலால் சான்றிதழ் தொடர்பாக அறவிடப்படும் பணம் குறித்து விசாரணை மேற்கொண்டு உண்மைநிலையை அறியவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

# பிரிட்டனில் இஸ்ரவேல் இல்லாத மத்திய கிழக்கு வரைபடம்

பிரிட்டனில் வெளியிடப்பட்டுள்ள ஒரு ஆங்கில பாடநூலில் மத்திய கிழக்கின் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது. அதில் இஸ்ரவேல் என்றொரு நாடு இடம்பெறவில்லை. அதற்குப்பதிலாக "ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன்"(Occupied Palastine) என்றே குறிப்பிடப்பட்டுள்ளது,




Skills in English writing level 1 என்ற பெயர் கொண்ட அந்நூல் பிரிட்டனில் பிரபலமான ஆங்கில மொழி பாடநூல் என ஊடக அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளன. இது கார்னர் என்ற ஆங்கில பாட போதனாசிரியர் ஒருவரால் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அனைவரும் உண்மையை வெளியிட்டால் பலஸ்தீன பிரச்சினை தீர வழிபிறக்கும் என அனேகமானோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாரின்..............11ம் பக்கத் தொடர்ச்சி

சென்றுவிடுவேன்" என்று அவர் ரவிஷங்கரிடம் கூறியதாகப் பதிவு செய்கிறது.

1940-களின் இறுதியில் கமலா சாஸ்திரி என்னுமொரு நடனமாதை ரவிஷங்கர் மணந்துகொண்டார். பின்னர் அவர் அமெரிக்காவில் கலைப்பணி ஆற்றிக் கொண்டிருந்தபோது நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான ஸ்யூ ஜோன்ஸ் என்னும் பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பில் 1979ம் வருடம் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பாடகியும் நடிகையுமான நோரா ஜோன்ஸ் என்னும் அந்தப் பெண் எட்டு முறை க்ராம்மி விருது வாங்கியிருக்கிறார். என்றாலும் அவரை ரவிஷங்கரின் இசை வாரிசு என்று சொல்லவே முடியாது. அந்த அளவுக்கு இந்திய இசைக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்பதுபோல் அவர் மேற்கத்திய பாணியை மட்டுமே வரித்துக் கொண்டவர். ஆனால் இவரை ரவிஷங்கரின் ஆளுமையில் ஒரு பகுதி என்று வேண்டுமானால் கூறலாம். ஏனெனில், ரவிஷங்கர் தன் இளமைக்காலத்தில் ஜாஸ், பாப், ராக் போன்ற மேற்கத்திய இசை வடிவங்கள் மீதே காதல் கொண்டிருந்தார். அதை மாற்றுவதற்குத்தான் உதய் அவரை இந்தியாவிற்குக் கொண்டு வந்து அலாவுத்தீன் கானிடம் சேர்த்தார். எனினும் அந்த மேற்கிசை ஈர்ப்பு பின்னாளில் அவர் யஹுூதி மெனுஹின், ஹாரிசன் ஃபோர்டு, கோல்ட்ரான், ஃபிலிப் க்ளாஸ் ஆகியோருடன் இணைந்து செய்த இசைப் பேழைகளில் வெளிப்பட்டது.

ரவிஷங்கருக்குள் இருந்த இந்தியச் செவ்வியல் இசைக் கலைஞனின் வாரிசு அவரின் இரண்டாவது மகளான அனுஷ்கா ஷங்கர்தான். ரவிஷங்கருக்கும் சுகன்யா ராஜன் என்பவருக்கும் 1981ல் பிறந்தவர்தான் அனுஷ்கா. ஆனால் ரவிஷங்கர் 1989ல்தான் சுகன்யா ராஜனைத் திருமணம் செய்துகொண்டார்!


அனுஷ்கா ஷங்கர் அப்படியே அப்பாவின் பிள்ளை. சித்தார் கலைஞர் என்பதையே தன் வாழ்க்கையாக தேர்ந்திருக்கிறார். 2003ல் கிராம்மி விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். ரவி ஷங்கர் மரணமடைவதற்கு சில நாட்களுக்கு முன்புதான் தந்தை மகள் இருவருமே 2013ம் ஆண்டிற்கான க்ராம்மி விருதுக்கு ஒருவருக்கொருவர் எதிராக நாமினேட் ஆகியிருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது. "The Living Room Sessions Part1" என்னும் பேழைக்காக ரவிஷங்கர் தன் 92வது வயதில் க்ராம்மிக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தார்! அனுஷ்கா பரிந்துரைக்கப் பட்டிருந்தது, TRAVELLER என்னும் பேழைக்காக. ரவிஷங்கர் மரணித்துவிட்ட சேதி வந்ததுமே வாழ்நாள் சாதனையாளருக்கான க்ராமி விருது அவருக்கு அறிவிக்கப் பட்டது. இத்துடன் சேர்த்து நான்கு. இனி, அனுஷ்கா அந்த க்ராமியை வென்றெடுத்து தந்தையின் வாரிசு என்பதை நிலைநாட்டுவார் என்று எதிர்பார்க்கலாம்.

நன்றி: பிரபஞ்சக் குடில்

# மழை குறைந்தது வெள்ளம் வடிகிறது

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலைமை சீரடைந்து வருவதுடன் வெள்ள நீர் வடிந்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது. பிரதான வீதிகளில் வெள்ளம் வடிந்துள்ளதால் துண்டிக்கப்பட்டிருந்த சகல போக்குவரத்துகளும் வழமைக்குத் திரும்பின.

சகல இடங்களுக்கும் பயணிகள் பஸ் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் முகாமையாளர் ரோஹண வட்டகே தெரிவித்தார். புத்தளம் - சிலாபம் வரையிலான ரயில் சேவையை தவிர்த்து ஏனைய அனைத்து பிரதேசங்களுக்குமான ரயில் சேவைகள் சீராக இடம்பெற்று வருவதாகவும் திணைக்களத்தின் திட்டப் பணிப்பாளர் விஜய சமரசிங்க கூறினார்.




இதேவேளை, தொடர்ச்சியாக பெய்த அடைமழை வெள்ளம் மற்றும் மண்சரிவின் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளதென அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத்லால் குமார தெரிவித்தார்.





மேலும் மேற்படி அனர்த்தங்கள் காரணமாக 36 பேர் காயமடைந்திருப்பதாகவும் 14 பேர் வரையில் காணாமற் போயிருப்பதாகவும் அவ்வதிகாரி ஊர்ஜிதம் செய்தார்.

குருநாகல், மட்டக்களப்பு, பொலன்னறுவை, அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் மழையினாலும் மாத்தளை, நுவரெலியா, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்கள் மண்சரிவினாலும் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக இதுவரை 80 ஆயிரத்து 534 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 14 ஆயிரத்து 916 பேர் வரை நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர். இவர்களுள் 5 ஆயிரத்து 421 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 341 பேர் தற்போது 169 நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளரெனவும் சரத்லால் குமார கூறினார்.

அத்துடன் வெள்ளம் மற்றும் மண்சரிவின் காரணமாக 337 வீடுகள் முழுமையாகவும் 2075 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்திருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் பதிவாகியுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மழை வீழ்ச்சியினளவு குறைவடைந்துள்ளமையை தொடர்ந்து நீரோந்துப் பிரதேசங்களின் நிலைமை வழமைக்குத் திரும்பியிருப்பதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர்வள முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி ஜானகி மீகஸ்தென்ன கூறினார்.

# இலங்கை சர்மிளாவும்.... தமிழக சல்மாவும்....

சென்ற இதழில் இடம்பெற்ற இந்தக் கட்டுரையின் ஒரு பகுதி எம்மையறியாமலேயே விடுபட்டுவிட்டது. பல அன்பர்கள் அதை எமது கவனத்துக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு நடந்த தவறுக்காக வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். மிகுதிப்பகுதி இதோ! .

சென்ற இதழின் மிதிப்பகுதி........

இலங்கை ஒரு பாரம்பரிய கலாசாரங்களை பின்பற்றுகின்ற நாடு என்கின்ற போதிலும், அங்கு ஏற்கனவே பாலியல் தொழில் மிகவும் அதிகமான அளவுக்கு பரந்திருப்பதால், அதனை சட்டபூர்வமாக்குவது சுற்றுலாத் துறைக்கு நல்லது. அதனால், அதில் ஈடுபடும் பெண்களுக்கு ஓரளவு பாதுகாப்பும் கிடைக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவர் ஒரு கவிஞர். இவர் எழுதி தமிழகத்தில் காலச்சுவடு பதிப்பகம் "சிறகு முளைத்த பெண் என்ற கவிதைப் புத்தகத்தை வெளியிட்டுள்ளது. இலங்கையிலும் அண்மையில் அதே நூல் அமைச்சர் ரவுப் ஹக்கீம் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். இவையெல்லாம் இவர் அந்த சர்ச்சையில் மாட்டிக்கொள்வதற்கு முன்னால் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போல் தமிழகத்திலும் ஒரு பெண் கவிஞர் உள்ளார் அவர் பெயர் சல்மா இவர் கூறுவதை கேளுங்கள்...

"எங்கள் வீட்டில் என் கணவரும் தொழுகை செய்யமாட்டார். நானும் அப்படித்தான். நாங்கள் இருவருமே வீட்டில் ரொம்பச் சாதாரணமாகத்தான் இருப்போம். முஸ்லிம் என்ற அடையாளமே எங்களுக்கில்லை

"என் தோழி ஒருநாள் வீட்டிற்கு வந்திருந்தாள். அவள் போகும்போது வீட்டில் ஸ்டிக்கர் பொட்டை விட்டுவிட்டுப் போய்விட்டாள். அதைக் கண்ணாடி முன்பு நின்று என் நெற்றியில் வைத்துப் பார்த்தேன். அதைப் பார்த்து என் பையனுக்குப் பயங்கரக் கோபம் வருகிறது. அழுது அடம்பிடிக்கிறான். "நீ என்ன சாமி கட்சிக்குப் போகப் போகிறாயா என்கிறான். சின்னப் பையனும் அழுகிறான். பெரிய பையனும் அழுகிறான். இப்போது சின்னப் பையன்களாக இருக்கும் மகன்கள் நாள் ஆக ஆக என்னை என்ன செய்வார்களோ என்ற நினைப்பு எனக்குள் ஓடுகிறது

இவர் எழுதிய "இரண்டாம் ஜாமங்களின் கதை முஸ்லிம் பெண்கள் முஸ்லிமல்லாத ஆண்களுடன் ஓடிப்போகின்ற சுதந்திரத்தைப் பற்றி பேசுகிறது. இரண்டாம் ஜாமங்களின் கதையைப் பற்றிய அன்றைய பெசன்ட்நகர் நிகழ்வில், ஏற்புரை ஆற்றிய சல்மா "எனது சமூகத்தைக் கொச்சைப்படுத்துவதோ, என் சமூக மக்களைப் புண்படுத்துவதோ எனது நோக்கமல்ல.. நான் கண்டவற்றை, கேட்டவற்றை, அனுபவித்தவற்றை அப்படியே எழுதினேன் என்றார்.

இப்படி தான் சார்ந்துள்ள சமுதாயத்தை கொச்சைப்படுத்துவது மட்டுமல்லாது மிகவும் ஆபாசமாகவும் எழுதியுள்ளார்....

இந்த வியாதிகள் தொடரும் ஏனென்றால் இவ்வாறு தன்னை அடையாளப்படுத்துவதன் மூலம் தன்னை தனித்துக்காட்டி தனக்கென ஒரு வாசகர் வட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் இது போன்றவர்களின் எண்ணம். இவர்களை இனம் கண்டு புறக்கணிப்போம்.

நன்றி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களா இவர்கள்?

குழந்தைகள் மீது பெற்றோர்கள் அன்பை மட்டுமே பொழிவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதை இரண்டு அண்மைய சம்பவங்கள் காட்டி நின்றன. சமயத்தில் பெற்றோர்கள் ரௌடிகளை ஒத்த வன்முறையைத் தமது பிள்ளைகளின் மீதே பிரயோகிப்பார்கள் என்பதற்கு இந்த இரண்டு நிகழ்வுகளும் உதாரணங்களாக உலகெங்கும் ஊடகங்களில் பதிவாகியுள்ளன.

5-12-2012 அன்று நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோவின் வசிக்கும் இந்தியத் தம்பதிகளுக்கு நோர்வே நீதிமன்றம் முறையே 18 மாதங்களும் 15 மாதங்களும் சிறைத்தண்டனை விதித்துள்ளது. பள்ளிக்கூடத்தில் எப்போதும் கவலையாக இருக்கும் அவர்களுடைய ஏழு வயது மகனை விசாரித்த போது, தூக்கத்தில் படுக்கையில் சிறுநீர்கழித்து விடுகிறான் என்பதற்காக அவனுடைய பெற்றோர்கள் அடிப்பதாகச் சொல்லியிருக்கிறான். அவனுடைய உடலில் தீக்காயங்கள் இருந்ததாகவும் பெல்ட்டால் அவனை விளாசியிருக்கிறார்கள் என்றும் ஒஸ்லோ போலீஸ் தலைவர் சொல்லியிருக்கிறார். அதனால் சில அசௌகிரியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதற்காக ஒரு சிறுவனை இப்படியா தண்டிப்பது?

மேற்கத்திய நாடுகளில் தனி மனித சுதந்திரம் என்ற பேரில் பெற்றோர்களுக்குத் தம் குழந்தைகளின் மீது கொஞ்சம் கூட உரிமை இல்லாமல் ஆக்கிவிடுகிறார்கள். ஐந்தாறு வயதுச் சிறார்கள், திட்டிவிட்டார்கள் என்று போலீசில் புகார் கொடுத்தால் போதும், பெற்றோர்கள் அடுத்த நிமிடம் கம்பி எண்ணிக் கொண்டிருப்பார்கள். இப்படியான கெடுபிடிச் சட்டங்கள் இருப்பதை வைத்தே பிஞ்சில் பழுத்த பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை மிரட்டிவிட முடியும். புண்ணிய வான்கள் வாழும் அமெரிக்காவில் இருந்து முன்பு ஒரு சேதி வந்தது. ஒரு பையனை ஆசிரியை கிண்டல் செய்ய சக சிறார்கள் சிரித்தார்களாம். உணர்ச்சி வசப்படாமல் அந்த மாணவன் வீட்டுக்குப் போய்விட்டு மறுநாள் ஒரு பிஸ்டலைக் கொண்டு வந்து டீச்சரையும் சக மாணவர்களில் நான்கு பேரையும் கொன்றுவிட்டான். இப்படியாக அங்கே உள்ள பிள்ளைகள் பல்வேறு உளவியல் சிக்கல்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

6-12-2012 அன்று இங்கிலாந்தின் வேல்ஸில், ஹைதராபாதைச் சேர்ந்த சாரா எகே (வயது 33) என்ற பெண் தன்னுடைய ஏழு வயது மகனைக் கொலை செய்து, குற்றத்தை மறைக்க அவனுடைய உடலை எரித்துவிட்டதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். யாசீன் என்ற அந்தச் சிறுவன் கொலை செய்யப்பட்டது ஜூலை 2010-ல். இப்போது வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. வீட்டில் நடந்த தீ விபத்தில் செத்துவிட்டான் என்று சாரா சொல்லியிருந்தார். ஆனால் யாசீனின் உடல் எரிவதற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்பே அவன் இறந்துவிட்டான் என்று போஸ்ட்மார்ட்டம் சொன்னது. சாராவை விசாரனை செய்ததில் தான் அடித்ததில்தான் அவன் இறந்து போனான் என்று உண்மையைக் கக்கிவிட்டார். அந்த அளவுக்குக் குரூரமாகத் தன் மகனை அந்தத் தாய் அடிக்கக் காரணம் என்ன தெரியுமா? அவர் எதிர்பார்த்த வேகத்தில் அவன் திருக்குர்ஆனை மனனம் செய்யவில்லை என்பதுதான்! சாரா கணிதவியலில் பட்டம் பெற்றவர். திருக்குர்ஆனைச் சரியாக மனனம் செய்யாததை ஒரு குற்றமாகக் கருதி தன் மகனைப் பிரம்பால் ஒரு நாயை அடிப்பது போல் அடித்ததாக அவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அடிக்கடி தன் மகனை செமத்தியாக அடிக்கும் மனநிலை அவருக்கு உருவாகுமாம். "அப்படி என் பிள்ளையை அடிக்கக்கூடாது என்று அல்லாஹ்விடம் பிரார்த்தித்துக் கொள்வேன். ஆனால் அந்த மனநிலை சில நாட்களில் மாறிவிடும்" என்று சொல்லியிருக்கிறார்.

இவற்றையெல்லாம் கேட்கும்போது ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது.



ஆயிரம் வருடங்களுக்கு முன் ஈராக் பக்கம் வாழ்ந்த ஒரு சூ.்பி ஒருநாள் தன் வீட்டிற்கு ஒரு பழத்தை வாங்கி வந்தாராம். ஏழையான அவர் எப்போதாவதுதான் அப்படி ஏதாவது பழம் கொண்டு வந்து தன் வீட்டினருக்குத் தருவார். அவருக்கு ஒரு சின்னஞ் சிறு மகன் இருந்தான். பழத்தை சாப்பிட வேண்டும் என்னும் ஆர்வம் அவனுள் உடனே எழுந்தது. பழத்தைக் கடித்துச் சாப்பிடக்கூடாது என்பதும், கத்தியால் நறுக்கிச் சாப்பிட வேண்டும் என்பதும் நபிகள் நாயகத்தின் நடைமுறை. அதைப் பேணுவதற்காகத் தந்தை ஒரு கத்தியை எடுத்துப் பழத்தை நறுக்க முனைந்தார். அப்போது அவருக்கு நபி (ஸல்) அவர்கள் பழத்தை எந்த முறையில் நறுக்கியிருப்பார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டது. தான் படித்த ஹதீஸ்களை எல்லாம் மனதில் புரட்டிக்கொண்டிருந்தார். இப்படியே அரை மணி நேரம் போயிற்று! அதுவரை சிறுவனின் ஆர்வம் தாங்குமா? பழத்தை நறுக்கித் தரும்படி அவன் நச்சரித்துக் கொண்டிருந்தான். சிந்தனையில் மூழ்கியிருந்த அவருக்கு இது எரிச்சலைக் கிளப்பவே, "தள்ளிப் போ ஷைத்தானே" என்று கத்தி பிடித்திருந்த கையால் அவன் பக்கம் வீசினார். கழுத்து வெட்டுப்பட்டு அவன் அவ்விடத்திலேயே இறந்துவிட்டான். நபிவழியைப் பேணுவதில் அந்த அளவு நூல் பிடித்தாற்போல 'மகான்கள்' இருந்திருக்கிறார்கள் என்பதை இக்கதை சொல்வதாக ஒரு ஏட்டில் எழுதப்பட்டிருந்தது! எனக்கோ இந்த நபரை ஒரு சூ.்பி என்றே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நபி வழியைப் பேணுவதற்குத் தடையாக இருந்தால் உங்கள் பிள்ளைகளைக் கொன்று விடுங்கள் என்றா நபி (ஸல்) சொல்லித் தந்தார்கள்? அவர்கள் வீட்டில் தொழும்போது பேரப்பிள்ளை ஹஸன் அவர்களின் முதுகில் ஏறி அமர்ந்து குதிரை ஓட்டுவதாக நாம் படித்திருக்கிறோம். நபி (ஸல்) அவர்கள் அப்படியே குதிரை போல் நகர்ந்து வந்து விளையாட்டுக் காட்டி தமது பேரர் திருப்தி அடைந்து இறங்கிப் போன பின்னர் தொழுகையைத் தொடர்வார்கள். இந்தச் சம்பவமும் ஹதீஸில் பதிவாகியிருப்பதுதான். "சிறார்கள் மீது அன்பு செலுத்தாதவரும் பெரியவர்களுக்கு மரியாதை காட்டாதவரும் என்னைச் சேர்ந்தவர் அல்ல" என்பது நபிவாக்கு. "உலக இலக்கியங்களிலேயே இதுதான் மகத்தான வரி" என்கிறார் அல்லாமா இக்பால்.

என் நண்பன் ஒருவனின் வீட்டின் வாசற்கதவில் ஒரு வாசகம் வருவோரை வரவேற்றது இப்படி: Read Quran Daily. தினமும் குர்ஆன் படிக்க வேண்டும் – சொல்லப்போனால் பயில வேண்டும் என்பதில் யாருக்கும் எவ்வித முரண்பாடும் இல்லை. அந்த வாசகத்திற்கு அவர் கொண்டிருக்கும் பொருள் வேறு என்பது நண்பனின் தந்தையிடம் பேசிக்கொண்டிருக்கும் போதுதான் தெரிந்தது! "வேறு எந்த நூலும் படிக்கலாகாதா?" என்று கேட்டபோது அழுத்தம் திருத்தமாக மறுத்துவிட்டார். படிக்கவே கூடாதாம். தேவை இல்லையாம். நேர விரயமாம். இறைநம்பிக்கையை நாசமாக்கி விடுமாம். ஹதீஸைப் படிக்கலாம் என்பது ஏனெனில் திருக்குர் ஆனுக்கான விளக்கம் என்பதால். இல்லையெனில் குர்ஆனைத் தவிர வேறு எதையுமே படிக்கக்கூடாதாம். இதை விளங்காமல் முஸ்லிம் சமூகம் அறியாமைப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கிறதாம்.



இப்படியெல்லாம் என்னென்னவோ கருத்துக்களை மழை போல் பொழிந்து கொண்டிருந்தார்.

இப்படித்தான் மார்க்கப் பற்று சிலரை சைக்கோ ஆக்கிவிடுகிறது. கற்பனை என்பதற்கே மார்க்கத்தில் இடம் கிடையாது என்று அவர் சொன்னார். "வீண் கற்பனையாளர்கள் நாசமாகட்டும்" (51:10) என்று திருக்குர்ஆன் சொல்கிறது. மனம் போன போக்கில் பிரமைகளையும் இச்சைகளையும் அடிப்படை யாகக் கொண்டு இறைக்கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்துக் கொள்வதைக் கண்டிக்கும் திருவசனமாகவே இதனை விளங்க வேண்டும். முற்று முழுதாகக் கற்பனையை நிராகரிக்கும் வசனமாக அல்ல. வீண் கற்பனை யைத்தான் இந்தத் திருவசனம் சாடுகிறது. பிள்ளைகளுக்கு மனவிரிவை நல்கும் கற்பனைகளை எப்படி வீண்கற்பனைகள் என்று முத்திரையிட முடியும்? நபிகளின் முன்னிலையில் 'பானத் சுஆத்' என்னும் கஸீதாவைப் பாடிய கஅப் (ரலி) அக்காவியத்தைக் கற்பனையான ஒரு காதல் சூழலைக் குறிப்பிட்டுத்தான் ஆரம்பிக்கிறார். "வீண்கற்பனை செய்பவனே, ஓடிப்போ" என்று நபி (ஸல்) அவரை விரட்ட வில்லை. கற்பனை என்பதே தகாது என்றால் முஸ்லிம்கள் மூளையை முழுமையாகப் பயன்படுத்துவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்று ஆகிவிடும். "உங்கள் குழந்தைகள் பேசத் துவங்கும்போது அவர்களுக்கு முதலில் "லா இலாஹ இல்லல்லாஹ்" என்பதைக் கற்றுக்கொண்டுங்கள்" என்பது நபிமொழி. "லா இலாஹ இல்லல்லாஹ்" என்பதே ஒரு முஸ்லிமின் முதல் வாசகமாகவும் அவன் இறக்கும் தருவாயில் இறுதி வாசகமாகவும் அமைய வேண்டும் என்னும் நோக்கில் சொல்லப்பட்ட ஹதீஸ் இது.

பேசத் தொடங்கும் பிள்ளைக்கு அதனைச் சொல்லித் தரும்போது எடுத்ததுமே முழு வாசகத்தையும் அது தெளிவாகக் கூறிவிடும் என்று சொல்ல முடியாது. சில பிள்ளைகள் பாதியை மட்டும் - 'லா இலாஹ' என்பதை மட்டும் சொல்லக் கூடும். அதற்குக் "கடவுள் இல்லை" என்று பொருள். உடனே பதறிக்கொண்டு இது என்ன நாத்திகம் பேசுகிறது என்று அடித்துக் கொன்று எரித்துவிடக் கூடாது. மெள்ள மெள்ளப் பழகி முழுசாகச் சொல்லும். முஸ்லிம் குழந்தையும் ஆரம்பத்தில் மழலைதான் பேசும். வளர வளரத்தான் அரபியெல்லாம் பேசக் கற்கும் எனப்தைப் புரிந்து கொள்ளும் பக்குவம் வேண்டும்.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவமும் பெற்றோரின் முன்யோசனையற்ற வளர்ப்பினால் ஏற்பட்ட ஒரு மனக்கோளாரின் வெளிப்பாடே என போலிஸ் மற்றும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. "உங்கள் பிள்ளைகள் அறிவாளிகளாக இருக்க வேண்டுமெனில் அவர்களுக்கு புனைக்கதைகளை வாசிக்க செல்லிக்கொடுங்கள். அவர்கள் மேலும் அறிவாளிகளாக இருக்க வேண்டும் எனில் அவர்களுக்கு மேலும் புனைக்கதைகளை வாசிக்க செல்லிக்கொடுங்கள்" என்கிறார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். பிள்ளைகள் ஆன்மாவின் சிறகுகளுடன் பிறக்கின்றன. பொறுப்பாக வளர்க்கிறேன் என்று பல பெற்றோர்கள் அந்தச் சிறகுகளைத்தான் முதலில் வெட்டி எறிகிறார்கள். அந்நிலையை விட்டும் நம்மை இறைவன் காப்பானாக!

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது கொழும்பு இரவு நேர மோட்டார் ஓட்டப் போட்டி வெற்றிகரமாக நிறைவு



2வது தடவையாக இடம்பெற்ற கொழும்பு இரவு நேர மோட்டார் ஓட்டப் போட்டியில் டிலந்த மாலகமுவ சுப்பர் காரோட்டப் போட்டியில் மீண்டும் தனது திறமையை நிருபித்துள்ளார். அவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். மாலகமுவ GT3, GT4 ஆகிய போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று சிறந்த இலங்கை ஓட்ட வீரர் என்ற பெருமையை நிலைநாட்டியுள்ளார். இந்த ஓட்டப் போட்டியின் மூலம் இலங்கை சார்பாக சர்வதேச பந்தய ஓட்ட வீரர்கள் வரிசையில் மாலகமுவ இடம் பிடித்துள்ளார். கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் ஆரம்பமான இப்போட்டித் தொடர் 15.12.2012 7.30 மணிக்கு ஆரம்பமாகி அடுத்த நாள் அதிகாலை 2.30 மணிக்கு முடிவடைந்தது.

இப்போட்டியைக் காண அதிகளவான ரசிகர்கள் அதாவது கடந்த முறை இடம்பெற்ற போட்டியை கண்டுகளிப்பதற்கு வந்ததை விட அதிகளவானவர்கள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியை கால்டன் மோட்டார் கழகம், ஆசியன் மோட்டார் சங்கம், இலங்கை மோட்டார் சங்கக் கழகம் ஆகியன இணைந்து நடத்தியது. போட்டியில் இடை இடையே வான வேடிக்கை மூலம் ரசிகர்களை ஏற்பாட்டாளர்கள் குதூகலப்படுத்தினர். அதுமட்டுமல்லாமல் பாடல், நடனம் என்பனவும் இடம்பெற்றது. சுப்பர் கார் ஓட்டப் போட்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூன்றாவது புதல்வர் யோசித்த ராஜபக்ஷ7வது இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மோட்டார் சைக்கிள் குழு ஓட்டப் போட்டியில் நெட் டானியல் முதலிடத்தையும் கயான் சந்துருவன் 2ம் இடத்தையும் பெற்றனர். இப்போட்டியில் 13 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். ஆனால் கடைசித் தறுவாயில் கயான் முதல் இடத்தை இழந்தமை குறிப்பிடத்தக்கது. போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு கண்காட்சி சைக்கிளோட்டப் போட்டி. முச்சக்கர வண்டி ஓட்டமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளைக் கண்டுகளிக்க வெளிநாடுகளின் தூதுவர்கள், எதிர்கட்சி, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

# கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண உதைப்பந்தாட்டம்

## பிரேசில் கொரிந்தியன்ஸ் அணி வெற்றி

ஜப்பான் யோகோஹாமா நகரில் நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான உலகக் கோப்பையை செல்சி அணியுடன் மோதிய கொரிந்தியன்ஸ் அணி 1 – 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத் தொடருக்கு முன்னரே செல்சி அணிதான் வெல்லும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் பிரேசில் நாட்டின் கொரிந்தியன்ஸ் அணி அதை முறியடித்து எல்லா உதைபந்தாட்ட ரசிகர்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கொரிந்தியன்ஸ் அணி சார்பாக பாலோ குறேரோவின் தலையால் 69வது நிமிடம் கோல் பெறப்பட்டது. செல்சி அணியின் பெர்னாண்டோ ரொறஸ் ஏறத்தாள நான்கு இலகுவான தருணங்கள் கிடைத்தும் கோல் பெற தவறியது குறிப்பிடத்தக்கது.

கழகங்களுக்கிடையிலான உலகக் கோப்பையை கொரிந்தியன்ஸ் அணி 12 வருடங்களுக்கு பின்னர் இரண்டாவது முறையாக வென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதுவரை இரண்டு தடவை இக்கிண்ணத்தை ஸ்பெயினின் பார்ஸிலோனா அணிதான் வென்றுள்ளது என்பது முக்கிய விடயமாகும். இங்கிலாந்து கழகங்களை பொறுத்தவரை மன்செஸ்டர் யுனைட்டெட் அணி மட்டுமே இக்கிண்ணத்தை 2008 ஆம் ஆண்டு வென்றதும் குறிப்பிட த்தக்க விடயமாகும்.

# ஒரு நாள் போட்டியிலிருந்து சச்சின் ஓய்வு!

Sachin Tendulkar announces retirement from one day cricket



உலகிலேயே ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் பெற்ற இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இந்த தகவலை இந்திய கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது. "ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக முடிவு செய்து உள்ளேன். உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் நான் இடம் பெற்று இருந்ததன் மூலம் எனது கனவு முழுமையாக நனவாகிவிட்டது. இனிவரும் போட்டிகளில் இந்திய அணி சிறப்பாக விளையாட எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். எனக்கு நீண்டகாலமாக ஆதரவாக இருந்தவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

1989 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகம் ஆன இவர், கடந்த மார்ச் 18 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதிராக ஆசிய கிண்ண போட்டியில் விளையாடியதே கடைசி ஒருநாள் போட்டியாகும். 39 வயதான டெண்டுல்கர் 463 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 18,426 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சராசரி 44.83 இதில் 49 சதமும், 96 அரைச் சதமும் அடித்துள்ளார். 154 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார். 32 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட் கைப்பற்றியதே அவரது சிறந்த பந்து வீச்சாகும்.

டெண்டுல்கர் ஒரே ஒரு 20 ஓவர் போட்டியில் விளையாடி உள்ளார். தற்போது ஒருநாள் போட்டியில் இருந்தும் ஓய்வு பெற்றுவிட்டார். டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே ,இனி அவர் விளையாடுவார். சச்சின் டெண்டுல்கர் 1996 முதல் 2000 ஆம் ஆண்டு வரை 73 ஒரு நாள் போட்டிகளில் கப்டனாக இருந்துள்ளார். இதில் 23 ஆட்டங்களில் இந்தியா வெற்றியீட்டியுள்ளதோடு 43 ஆட்டங்களில் தோல்வியடைந்துள்ளது. இதில் ஒருநாள் அரங்கில் முதல் முறை இரட்டைச் சதம் அடித்த பெருமை சச்சினுடையதாகும். அவர் 62 முறை ஆட்ட நாயகன் விருதும் 15 முறை தொடர் நாயகன் விருதும் பெற்றுள்ளார்.



# டோனி கிரெய்க் காலமானார்

இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரரும், பிரபல வர்ணனையாளருமான டோனி கிரெய்க்(66) மாரடைப்பால் உயிரிழந்தார். சமீப காலமாக நுரையீரல் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த அவர், உயிருக்கு ஆபத்தான நிலையில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள செயின்ட் வின்செட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த ஒக்டோபரில் அவருக்கு நுரையீரல் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தென்னாபிரிக்காவின் குயின்ஸ்டவுனில் பிறந்த டோனி கிரெய்க்கின் பெற்றோர்கள் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர்கள். அதனாலேயே இங்கிலாந்து அணிக்காக விளையாடும் வாய்ப்பு கிரெய்க்கிற்கு கிடைத்தது.

பின்னர் இங்கிலாந்து அணியின் தலைவராகவும் உயர்ந்தார். 1976/77ல் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட கிரெய்க் தலைமையிலான இங்கிலாந்து அணி முதல் 3 டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி கண்டது. அதுதான் அவருடைய தலைமை பதவியின் கீழ் இங்கிலாந்து பெற்ற சிறந்த வெற்றி.

ஓய்வுக்குப் பின்னர் வர்ணனையாளராக பணியாற்ற ஆரம்பித்த கிரெய்க், சில நாட்களுக்கு முன்பு வரை "சேனல் 9" என்ற அவுஸ்திரேலியா தொலைக்காட்சிக்காக வர்ணனை செய்து கொண்டிருந்தார்.

இங்கிலாந்து அணியின் சகல துறை வீரராக திகழ்ந்த டோனி கிரெய்க், 58 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8 சதம் உட்பட 3,599 ஓட்டங்களையும் 141 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். இதேபோல் 22 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 269 ஓட்டங்களையும் 19 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

டோனி கிரெய்க் இலங்கை கிரிக்கெட் வளர்ச்சிக்கு தனிப்பட்ட முறையிலும் வர்ணனையாளராகவும் உதவியுள்ளார். அவர் இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவை தவிர்த்து இலங்கையிலேயே அதிக காலத்தை கழித்துள்ளார். டோனி கிரெய்க்கின் மரணத்திற்கு கிரிக்கெட் உலகம் தனது கவலையை வெளியிட்டுள்ளது.

"தெளிவு" மாத இதழைப் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். வேறு முகவர்கள் இதனை விற்பனை செய்ய விரும்பினால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். கவர்ச்சியான கழிவு தரப்படும்.

| | |
|---|---|
| Rizwies, | 114, Galle Rd., Wellawatte. |
| Poobalasingam Book Shop | Colombo 6 |
| New City Stores | Akurana. |
| Hira Book Shop & Communication, | Akurana. |
| City Book Shop, | Thelumbugahawatte Road Junction Akurana |
| Humairas | No. 3, Hill Street, Kandy. |
| Abdullah & Co. | Super Market, Nawalapitiya. |
| Nawshad Traders, | Main Street, Akkaraipatru. |
| People's Shopping Centre, | Main Street, Addalaichenai. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org